உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 30 ஞாயிற்றுக்கிழமை [15-08-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 224

# கிளைமோர் தாக்குதலை அடுத்து மட்டக்களப்பில் பாதுகாப்புக் கெடுபிடி

## நேற்று இரண்டாவது நாளாக தேடுதல்

மட்டக்களப்பு, ஓக. 15

மட்டக்களப்பு நகரில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் சம்பவத்தையடுத்து மட்டக்களப்பு நகரில் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

பாதுகாப்புப் படையினர் திடீரென வாகனங்களை நிறுத்திசந்தேகமானவர்களை விசாரணைக்கு அழைத்துச் செல்வது கடந்த இரு நாள்களாக இடம்பெற்று வருகின்றது.

நேற்று 2 ஆவது நாளாக மட்டக்களப்பு நகரில் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன. 22 பேர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

கன்னன்குடாவைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் தவிர ஏனையோர் பின்னர் விடுவிக்கப்

(12 ஆம் பககம் பார்க்க)

# நல்லூர் உற்சவத்தையொட்டி ஊரடங்கு நேரம் தளர்வு

யாழ்ப்பாணம், ஓக. 15

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தையொட்டி உற்சவ நாள்களில் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் மட்டும் ஊரடங்கு நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக நேற்று மேற்படி தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த உற்சவத்தையொட்டி பக்தர்களின் நன்மை கருதி யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 12 ஆம் திகதிவரை ஊரடங்குச் சட்டம் இரவு 9.30 மணி தொடக்கம் அதிகாலை 4.00 மணி வரை அமுல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# புலிகளோ சிங்கள மக்களோ தீர்வுக்கு ஆதரவு இல்லை!

## சிறுவர் எழுச்சிப் பேரணி

வவுனியா, ஓக 15

வன்னிப் பகுதியில் உள்ள தர்மபுரம் கல்வி வலயத்தில் கடந்த வியாழக்கிழமை சிறுவர்களின் எழுச்சிப் பேரணி ஒன்று நடைபெற்றது

கிளிநொச்சி மருதனந்த வித்தியாலயத்தில் இருந்து மாலை5 மணிக்கு ஆரம்பமான

(12 ஆம் பக்கம் பார்க்க)



உரிமைகளைப் பறிப்பதற்கு மட்டும் தான் அரசும் எதிர்க் கட்சியினரும் ஒற்றுமைப் படுவினம் போல...!

## ரணில் நேற்று தெரிவிப்பு ஐ. தே. கவும் எதிர்க்குமாம்

கொழும்பு, ஓகஸ்ட் 15

அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் தீர்வு யோசனைகளை விடுதலைப் புலிகளோ, சிங்கள மக்களோ ஆதரிக்கவில்லை என்றும் ஐ. தே. கவும் ஆதரவளிக்கமாட்டாது என்றும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாவனல்ல என்ற இடத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் தனது அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும் போது ஐ. தே. க. அதற்கு ஆதரவாக வாக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹற்றனில் நேற்றும் குண்டு ஒன்று மீட்பு!

கொழும்பு, ஓக. 15

ஹற்றன் ரயில் நிலையத்தின் அருகே உள்ள ஹோட்டல் ஒன்றுக்குச் சமீபமாக வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று நேற்றுக்காலை படையினரால் மீட்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஹற்றன் பம்பர் வீதியில் அமைந்துள்ள தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்துக்கு அருகில் இருந்து நேரம் கணித்து வெடிக்க வைக்கும் குண்டு ஒன்று மீட்கப்பட்டது தெரிந்ததே. இது இரண்டாவது சம்பவம் ஆகும்.

[12 ஆம் பக்கம் பார்க்க]

# புலிகளின் தமிழீழக் கோரிக்கைகூட பிரச்சினைக்கு தீர்வாக அமையலாம்

## பிரபாவுடனான சந்திப்பில் கூறுவேன் என்கிறார் கொத்தலாவல

கொழும்பு, ஓக. 15

நாட்டில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் அமைதியாக வாழும் நிலைமையை ஏற்படுத்துமானால் புலிகளின் தமிழீழக் கோரிக்கை கூட இனப் பிரச்சினைதீர்வுக்குஒருமாற்றுதிட்டமாக அமையலாம். பிரபாகரனைச் சந்திக்கும் போது இதனைத் தெரிவிப்பேன்.

வர்த்தக சங்கங்களின் சம்மேளனத் தலைவர் லலித் கொத்தலாவல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனுடன் நேரில் சந்தித்து பேச்சு நடத்துவதே பயன்உள்ளதாக அமையும்.

தீர்வுத்திட்டம் குறித்து புலிகளுடன் பேசுவதற்கு முன்னதாக அரசும் எதிர்க்கட்சியும் ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா - மன்னார் வீதியில் படையினர் பாதுகாப்பு இன்றி வாகனங்கள் செல்ல அனுமதி

வவுனியாவில் இருந்து மன்னாருக்கு பயணம் செய்யும் பயணிகள் வாகனங்கள் படையினரின் பாதுகாப்புடன் வாகனத் தொடர் அணியாகப் போக்குவரத்துச் செய்யும் முறை நீக்கப்பட உள்ளது.

அடுத்த வாரம் முதல் பயணிகள் வாகனங்கள் வழமை போன்று சேவையில் ஈடுபட முடியும் என்றும் —

படையினரின் வாகனங்களுடன் தொடரணியாகப் பயணம் செய்யத் தேவை இல்லை என்றும் —

வவுனியா படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த காலங்களில் வவுனியா — மன்னார் வீதிவழியாக மன்னாருக்கானபோக்குவரத்து இராணுவ வாகனத் தொடர் அணியுடன் இணைந்தே நடைபெற்று வந்தது,

அடுத்த வாரம் முதல் வவுனியாவில் இருந்து மன்னார் செல்லும் வாகனங்கள் வேப்பங்குளம் சோதனை நிலையத்தில் சோதனைகளை முடித்துக்கொண்டு தொடர் அணிக்குக் காத்து நிற்காது நேரடியாக மன்னார்செல்ல முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3-6-21)

## வடக்கு - கிழக்கில் தேர்தல் நடத்தும்சூழ்நிலை இல்லை

### அலவி மௌலானா தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 15

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போதைக்கு தேர்தல் எதுவும் நடத்தப்படமாட்டாது. அதற்கான சூழ்நிலையும் அங்கு இல்லை.

இவ்வாறு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அலவி மௌலானா செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்தார்.

பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பச்சிலைப்பள்ளி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் 1998ஆம் ஆண்டு நடத்தப்பட்டன, ஆனால் தெரிவுசெய்யப்பட்ட பதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேடுதல்

வவுனியா, ஓக. 15

வவுனியா, வயிரவப்புளியங்குளம் பகுதி நேற்று படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தீவிர தேடுதல்கள் நடத்தப்பட்டன.

அந்தப் பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் வயிரவப் புளியங்குளத்தில் உள்ள ரெலோ முகாமுக்கு முன்னால் உள்ள சிறுவர் பூங்காவுக்கு கூட்டிவரப்பட்டனர். அங்கு தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவர்கள் முகமூடி அணிந்த தலையாட்டியின் முன் நிறுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (இ-6-164)

## அமைச்சர் பதவியை தலித் எழில்மலை துறப்பு!

### பா. ம. க. விலிருந்தும் விலகினார்

சென்னை, ஓக. 15

இந்திய மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் தலித் எழில்மலை தனது அமைச்சர் பதவியை நேற்று இராஜினாமாச் செய்தார்.

பாட்டாளிமக்கள் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் பொதுச் செயலர் பதவியில் இருந்தும் தான் விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விரைவில் நான் எனது ஆதரவாளர்களுடன் அ. தி. மு. கவில் இணையப் போகின்றேன்.

தமிழ் நாட்டில் இரு அணிகளுக்கு மட்டுமே இடம் உண்டு. மக்களின் உணர்வுகளைப் பார்க்கும் போது அ. தி. மு. க அணியே வெற்றி

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் குடும்பத்துக்கு உ_தவ "கைகொடுப்போம்" நிதி

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆரம்பித்தது

யாழ்ப்பாணம், ஒக. 15

குடாநாட்டில் காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கு உதவுவதற்காக 'கைகொடுப்போம்' என்ற நிதி சேகரிப்புத்திட்டம் ஒன்றை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆரம்பித்துள்ளது.

இது விடயமாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காணாமல் போனவர்களினால் கதி இழந்து தவிக்கும் மிகவும் மோசமான பொருளாதாரச் சிக்கலை எதிர் நோக்கி நிற்கும் வறுமைப்பட்ட குடும்ப உறவுகளுக்கு எம்மால் இயன்ற பொருளாதார உதவிகளைச் செய்வதற்காகக் ''கை கொடுப்போம்'' எனும் ரூபா 50 பெறுமதியான அன்பளிப்புச் சீட்டுக்கள் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் யாவருக்கும் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நாம் செய்யும் சிறு உதவிகள் மூலம் பல வறுமைப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த எம் உடன் பிறப்புக்களுக்கு எம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய முடியும். பல்கலை மாணவர்கள் என்றில்லாமல் மனிதாபிமானம் நிறைந்த சகலரும் தமது பங்களிப்பை வழங்குவதன் மூலம் காணாமல் போனவர்களினால் கதி இழந்து தவிக்கும் எம் உடன் பிறப்புக்களின் துன்பங்களில் சிறிதளவாவது பங்கெடுத்துக் கொள்ள முடியும் என நாம் உறுதியாக நம்புகின்றோம் என்றுள்ளது ((ஐ-3)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்

கனவே கலையாதே

மலபார் பொலீஸ்

பூவெல்லாம் கேட்டுப் பார்

பிரதிகள் மேமியம் பெற்றுக் கொள்ளலாம்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்
(சி/8525)

## விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக. 15

வடக்கு—கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவினால் நடத்தப்படும் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்தபோட்டிப் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சை யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மற்றும் கிளிநொச்சி, திருகோணமலை, கல்முனை, மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு ஆகிய நகரங்களில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாவும் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வடக்கு — கிழக்கு பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் க. பரமேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ-க)

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஒக. 15

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் வி. எஸ். பி. நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தி வரும் டொனால்ட் கணேஸ குமார் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரை இறுதி ஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இன்றைய ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழகஅணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணி மோதும். (இ-6)

## பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி ஜெ. அனுஜா

ஜெகதீஸ்வரன் (ஈசன்) றஞ்சனா தம்பதியரின் செல்வப் புதல்வி அனுஜா,

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (1999 – 08 – 15) ஞாயிறு பிற்பகல் 4 மணியளவில் தனது இல்லத்தில் வெகுசிறப்பாக கொண்டாடுகிறார்.

இவரை அம்மா, அப்பா, அம்மம்மா, மாமிமார், மாமன்மார், சித்தப்பாமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

பெற்றோர்

579, கே. கே. எஸ் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (68209)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் **மூத்ததம்பி பொன்னையா**
(பண்டிதர்)
(முன்னாள் அதிபர்
நாகர் கோயில் வடக்கு நாகேஸ்வரா மகாவித்தியாலயம்)

''ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தாறில் ஆசானாய் வந்தெமக்கு அறிவை ஊட்டிப் பேருதவி பல புரிந்தீர் எட்டாண்டாக பெரு நன்றிக் கடன் தீர்க்க வகையறியோம் பாரதனில் செய்த தொண்டு போதுமென்றோ பரமனடி காண்பதற்குச் சென்று விட்டீர்! தீராத கடன் தீர்க்க வகையறியோம் சிந்தைதனில் வைத்து என்றும் பூஜிப்போமே''

பழைய மாணவர் சங்கம்,
நாகேஸ்வரா மகாவித்தியாலயம்,
நாகர் கோயில் வடக்கு. (68221)

புலமைப் பரிசில் 2000
பயிற்சிப் பரீட்சை– $0_1$
இன்றுஞாயிற்றுக்கிழமை (15-08-99) நடைபெறும்.
பரீட்சைப் பகுதி
BOND
(68213)

ராஜா
யாழ்ப்பாணம்
பிரசாந்த் – ஐஸ்வர்யா
நாசர் நடித்த
ஜீன்ஸ்
10-30, 1–45, 5–00
(புதிய நேரம்)
(சி/8472)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று மட்டும்
முரளி சிம்ரான்
நடித்த
கனவே கலையாதே
[புதிய வெளியீடு]
நேரம்: 10-30, 2–30
(68097)

நாகம்ஸ்
சுன்னாகம்
கார்த்திக், நக்மா,
கவுண்டமணி நடித்த
மேட்டுக்குடி
காட்சிகள் 11.00, 2.30
[புதிய நேரம்]
[68220]

# மரண அறிவித்தல்கள்

## முத்துக்குமாரு மயில்வாகனம்

(Retired Chief inspector Of Telecommunication, Jaffna.)

முத்துக்குமாரு மயில்வாகனம் அவர்கள் 14-8-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செளபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகரத்தினம், சிவபாக்கியம், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நீலாம்பிகையின் மைத்துனரும் அருணாசலம், இராசசிங்கம், முத்துக்குமாரசிங்கம், சிவலோகநாதன், ராஜலக்சுமி, விக்கினேஸ்வரராஜா, சண்முகநாதன், யோகநாதன் (கல்வி அமைச்சு, திருமலை), சரோஜினிதேவி, விமலாதேவி, பராசக்தி, சசிகலா, றஞ்சி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவகாமசுந்தரி, தில்லையம்பலம், தில்லைநாதன், தில்லைவாசன் ஆகியோரின் அருமைப் பெரியப்பாவும், விஜயசிங்கம், டாகினி, பிறேமிலா, ரேவா, விஜயகுமார், உமாசுதன், சுதாகரன், வேந்தன், வித்தியா, உமாகஜேந்திரன், விக்னா, தில்லைவாணி, லோஜி, நிருஷன், Joe ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (14-8-99) நேற்று சனிக்கிழமை இல. 60, அருணகிரி வீதி இல்லத்திலிருந்து மாலை 3.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு திருகோணமலை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

தகவல்:
வி. யோகநாதன்
(கல்வி அமைச்சு, திருமலை)
60, அருணகிரி வீதி,
திருகோணமலை. (சி/8521)

## திருமதி கணேசு இரத்தினாம்பிகை

(அம்பிகா)
(வேலணை வடக்கு)

வேலணை வடக்கு ஐந்தாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய திருமதி கணேசு இரத்தினாம்பிகை லண்டனில் 13-08-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா சின்னத்தங்கம் தம்பதிகளின் மருமகளும் லண்டனில் வசிப்பவர்களான ஜெயக்குமார், ஜெயரதி, ஜெயசீலா ஆகியோரின் அருமைத் தாயாரும் சிவமணி, சிவகுமரன், திருக்குமரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சஹானா, சர்மிலன் ஆகியோரின் அருமைப்பேர்த்தியாரும் காலஞ்சென்ற திருமதி இலகம்மா மற்றும், திருமதி பராசக்தி (லண்டன்), மயில்வாகனம் (முன்னாள் பாணந்துறை வர்த்தகர்) (கொழும்பு) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஆசிரியர் பொன்னையா, வர்த்தகர் பசுபதிப்பிள்ளை மற்றும் பரமேஸ்வரி (கொழும்பு), பழனியப்பா (பிரான்ஸ்), விசாலாட்சி (கொழும்பு), மகாலட்சுமி (கொழும்பு), மகாலிங்கம் (இளைப்பாறிய தபாலதிபர்), திருநாவுக்கரசு (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

தகவல்:

சி. த, மகாலிங்கம் (மைத்துனர்), 64, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

திருமதி ஞா. சிவநாதன்(பெறாமகள்) பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர், வங்களாவடி, வேலணை.

பொ. சிவலிங்கம், ஆசிரியர் (பெறாமகன்)

திருமதி இ. ஞானரட்ணம், ஆசிரியை (பெறாமகள்) யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை.

G. JEYAKUMAR
10 Bysouth Close
Clayhall, Ilford
IG 5 OXN U.K
T.P. No: 0181 – 2620554 (68226)

## திருமதி கந்தையா சுந்தரம்மா

காரைநகர் வேதர்அடைப்பைப் பிறப்பிடமாகவும் வவுனியா வைரவப்புளியங்குளத்தைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சுந்தரம்மா 14-8-99 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற N. A. கந்தையா (Jaffna Stores Dankotuwa) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கோவிந்தர் தங்கம் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற நாகமுத்து அம்பலவாணர் தம்பதிகளின் மருமகளும் மனோன்மணி, தர்மலிங்கம், கங்காதேவி, யெகேஸ்வரி, குகபரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பொன்னம்பலம், கனகலிங்கம், நாகேஸ்வரி, குணரத்தினம், சரஸ்வதி ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற சிவகாமி, காலஞ்சென்ற ஆறுமுகம் (மலேசியா), காலஞ்சென்ற முத்தையா, காலஞ்சென்ற மீனாச்சி, கந்தையா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-8-99) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோ. கந்தையா
(சகோதரன்)
119, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். (68227)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்திலும் பாடசாலையிலும் ஒரே இரவில் திருடர் கைவரிசை

## கல்வியங்காட்டில் வெள்ளி இரவு சம்பவங்கள்

வலி. கிழக்கு, ஓக. 15

கல்வியங்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளி இரவு ஆலயம் ஒன்றிலும் அருகில் இருந்த பாடசாலையிலும் திருட்டு இடம்பெற்றிருக்கின்றது.

கல்வியங்காடு இலங்கை நாயகி மனோன்மணிஅம்பாள் ஆலயத்தின் கூரையைப் பிரித்து மூலஸ்தானப் பகுதிக்குள் இறங்கிய திருடர்கள் அம்பாளின் தங்க நகைகளைத் திருடியதுடன் அங்கிருந்த வசந்த மண்டபத் திறப்பை எடுத்து அந்த மண்டபத்தைத் திறந்து அங்கிருந்தும் தங்கச் சங்கிலி ஒன்றைத் திருடியுள்ளனர்.

மொத்தம் 10 பவுண் நகைகள் திருடப்பட்டிருப்பதாக கோப்பாய் பொலீஸாரிடம் முறையிடப்பட்டிருக்கிறது.

இந்த ஆலயத்தில் மஹோற்சவம் இடம்பெற்று வந்தது. தீர்த்த உற்சவதினத்தன்றே இத் திருட்டு இடம்பெற்றிருக்கிறது.

ஆலயத்தில் தமது கைவரிசையைக் காட்டிய திருடர்கள் அருகே உள்ள பாடசாலையில் அதிபரின்அலுவலகத்தையும் உடைத்துத் திறந்து பொருள்களைத் தாறுமாறாக வீசியுள்ளனர், காகிதாதிகளையும் களவாடியுள்ளனர்.

[ஐ-180]

# இரு குடும்பப் பெண்கள் தடுத்து வைத்து விசாரணை

யாழ்ப்பாணம், ஓக. 15

சாவகச்சேரி, கைதடிப் பகுதிகளில் விசாரணைக்கு வருமாறு இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்ட இரு குடும்பப் பெண்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைதடி வடக்கைச் சேர்ந்த திருமதி செல்வராணி பரமேஸ்வரன் (வயது 42) என்பவர் கடந்த 10 ஆம் திகதி கைதடி இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்டு இதுவரையும் விடுவிக்கப்படவில்லை என்றும்—

சாவகச்சேரி தபால் நிலைய வீதியைச் சேர்ந்த திருமதி கலாநிதி குலசேகரம் (வயது 37) கடந்த 11 ஆம் திகதி சாவகச்சேரி இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்டு இதுவரையும் விடுவிக்கப்படவில்லை என்றும்—

உறவினர்கள் தமதுமுறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை— நேற்று முன்தினம் காலை சுன்னாகத்தில் வைத்துப் படையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கைதடி மேற்கைச் சேர்ந்த பரமநாதன் நவரட்ணம் (வயது 24) என்ற இளைஞர் பின்னர் விடுவிக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-5-ரி)

# அரியாலை ஆனந்தன் வடலி பகுதியில் பெருமளவுமிதிவெடிகள்

அரியாலை, ஓக. 15

அரியாலை ஆனந்தன் வடலி வீதிப் பகுதியில் பெருமளவு மிதிவெடிகள் புதையுண்டிருக்கலாம் என அஞ்சப்படுவதால் அவற்றை அகற்றி உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மகஜர் ஒன்றை அரியாலை மத்தி அருணோதயா சனசமூக நிலையம் யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்தப் பகுதியில் அதிகளவில் மிதிவெடிகள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதால் இப்பகுதி மக்கள் நடமாடுவதற்கு அஞ்சுகின்றனர். இப்பகுதியில் ஏற்கனவே பல கால்நடைகள் மிதிவெடிகளில் சிக்கியுள்ளன.

அதேவேளை இரு பொது மக்களும் கால்களை இழந்ததுடன் சிலர் காயங்களுக்கும் இலக்கானார்கள் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ஐ-17-86)

## நெடுந்தீவுக்கு புதிய படகு சேவை

நெடுந்தீவு — குறிகாட்டுவானுக்கான படகுச்சேவையில் மூன்றாவது படகாக 'மாதா' இயந்திரப் படகும் சேர்ந்துள்ளது.

இதுவரை பலநோ. கூ. சங்கப்படகும் தனியார் படகான அக்குவாட்டி படகுமே சேவையில் ஈடுபட்டு வந்தன.

[ஐ-111]

## முதுதத்துவமாணி தகுதிகாண் பரீட்சை

யாழ். பல்கலைக் கழகத்தினால் கடந்த வருடம் நவம்பர் மாதம் நடத்தப்பட்ட முதுதத்துவமாணித் தகுதிகாண் பரீட்சை (எம். பில். கியூ.) முடிவுகள்வெளியாகிஉள்ளன.

சித்தியடைந்தவர்களின் பெயர் மற்றும் பாடவிவரம் வருமாறு:

★ சமூகவியல்:- திருமதி ரி. சரோஜா

★ தமிழ்:- திருமதி எஸ். .ட்சியலட்சுமி

★ இந்துநாகரிகம்:- இ. நித்தியானந்தன், ரி. சிறீதரன், திருமதி பி. மாலினி

★ நாடகமும், அரங்கியலும்:- கே. ஞானபாஸ்கரன்

★ வர்த்தகம்:- கே. விக்கினேஸ்வரன், திருமதி என். கேதீஸ்வரி, எஸ். சாயீசன், என். ராஜகுமாரன்.

(இ-7)

# சமாதானக் கலைஞர்கள் குழுவில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும்

## புலிகள் குற்றச்சாட்டு

வவுனியா, ஓக. 15

போரை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாக எம்முடன்பேச்சுவார்த்தை நடத்த வந்த சமாதானத்துக்கான கலைஞர்கள் தூதுக்குழுவில் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூன்று பேர் அடங்கியிருந்தனர். இவர்கள் சமாதானம் என்ற போர்வையில் தகவல் சேகரிக்கும் நோக்குடனேயே வன்னிக்கு வந்திருந்தனர்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான பெரிய தம்பனை என்ற இடத்தில் வைத்து தம்மிடம் தெரிவித்ததாக நேற்று முன்தினம் மடுவுக்குச் சென்று திரும்பிய பி. பி. ஸியின் சிங்கள சேவையான 'சந்தேசய' மற்றும் 'ராவய' பத்திரிகையின் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

ராவய, பி. பி. ஸியின், சந்தேசய செய்தியாளர்கள் ஒரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு மடுவுக்குச் சென்றிருந்தனர்.

மடுவுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய இவர்களை பெரிய தம்பனை என்ற இடத்தில் மறித்த விடுதலைப்புலிகள் மேற்கண்டவற்றைத் தெரிவித்தனர் எனத் தெரியவந்தது.

சமாதானத்துக்கான கலைஞர் குழு என்ற போர்வையில் வந்தவர்களில் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களும் இருந்தனர் என்பதை நாம் உடனடியாகவே தெரிந்துகொண்டோம். பின்னர் சம்பந்தப்பட்ட மூவரையும் தனியே அழைத்துச் சென்று நாம் புத்திமதி கூறினோம். இத்தகைய நடவடிக்கைகளினால் ஒருபோதும் சமாதானம் ஏற்படப்போவதில்லை என நாம் அந்த மூவருக்கும் எடுத்து விளக்கினோம்.—

இப்படி விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் தம்மிடம் தெரிவித்ததாக செய்தியாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

[இ-7- 164]

## திடீர் பரிசோதனையின் போது

# ஆயிரக்கணக்கான 'ஜூஸ்' பைக்கற்றுக்கள் அழிப்பு

சண்டிலிப்பாய், ஓக. 15

முன் அனுமதி பெறாது தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான ''ஜூஸ்'' பைக்கற்றுகள் யாழ். சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மானிப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள கடைகள் மற்றும் ''ஜூஸ்'' தயாரிக்கும் வீடுகள் ஆகியவற்றில் நேற்று முன்தினம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

யாழ். மாவட்ட தலைமை பொது சுகாதார பரிசோதகர் எஸ். இராஜேந்திரா யாழ். மாவட்ட உணவு மருந்துப் பரிசோதகர் ரி. மகாதேவன், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி எஸ். ரவீந்திரன், சங்கானை பொது சுகாதார பரிசோதகர் இ. இராஜதுரை ஆகியோரைக் கொண்ட குழுவினர் இத்திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர்.

சுகாதாரத் திணைக்களத்தின் முன் அனுமதி பெறாது— சுகாதார விதிகளுக்கு முரணாக — 'ஜூஸ்' தயாரிப்பது, விற்பது தடை செய்யப்பட வேண்டும் என்று யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் அண்மையில் விடுத்திருந்த பணிப்புரைக்கிணங்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை —

யாழ் மாவட்டத்தில் உள்ள ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் இது போன்ற திடீர் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறியப்படுகின்றது.

(ஐ-135)

# கைதடி இளைஞர்கள் மூவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 15

கடந்த 10 ஆம், 11 ஆம் திகதிகளில் கைதடிப் பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் காணாமற்போய் விட்டதாக இவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைதடி கிழக்கைச் சேர்ந்தவர்களான முருகதாஸ் ஜெயரூபன் (வயது 20), பரமானந்தன் சசிகரன் (வயது 20), கைதடி தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி தர்மராசா (வயது 25) ஆகியோரே காணாமற்போனவர்களாவர்.

இவர்கள் காணாமற்போனது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாவட்ட இணைப்பதிகாரி எஸ். ஸ்ரீதரன் படை முகாம்களுடன் தொடர்பு கொண்டபோது இவர்கள் எந்தப்படை முகாமிலும் தடுத்து வைக்கப்படவில்லை என்று படை வட்டாரங்கள் தெரிவித்ததாக அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

(ஐ-5-ரி)

## கலைத் தூது மணி மண்டபம் திறப்பு

யாழ். திருமறைக் கலாமன்றத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கலைத் தூது மணி மண்டபத்தின் திறப்பு விழாஇன்றுஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு இடம் பெறும்.

யாழ். ஆயர் அதி. வந். தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இந்த மணி மண்டபத்தைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பார்.

[ஐ-17]

## அர்ஜுனாவுக்கு தடை உத்தரவு

இலங்கைகிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் அர்ஜுன ரணதுங்க இலங்கை அணியுடன் ஈடுபடுவதற்கு பயிற்சியில் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தடை விதித்துள்ளது.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியின்றி கனடாவின் ரொரண்டோ நகரில் இடம்பெற்ற கண்காட்சி கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் பங்குபற்றும் நோக்குடன் அர்ஜுனா அங்குசென்றமையே இந்தத் தடைக்குக் காரணம் எனத் மேலும் தெரிவிக்கப்பட்டது

(உ-8)


## கண்ணீர் அஞ்சலி

12 - 08 - 1999 இல் சிவபதமடைந்த இளைப்பாறிய தபால் ஊழியரும் சோதிடருமான

அமரர்

**அம்பலம் கனகரத்தினம்**

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.

அவரின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடுஅவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தபாலதிபரும், ஊழியர்களும்,
அஞ்சலகம், கொடிகாமம்.

(சி/8519)



**கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!**

**ஹோட்டல் சீவம்ஸ்**

தலைநகரில் கடந்த 15 ஆண்டுகளாக உங்களுக்கு சிறந்த சேவை செய்து வரும் ஒரே ஸ்தாபனம்

**ஹோட்டல் சீவம்ஸ்** இன்றே விஜயம் செய்யுங்கள்!

கொழும்பில் தங்குவதற்கு மிகச்சிறந்த சுற்றாடலுடன் நல்ல காற்றோட்டம் உள்ள தனி அறைகளும் இரண்டு பேர் தங்குவதற்கு ஏற்ற அறைகளும் சிற்றுண்டிச்சாலையுடன் அமைந்த ஒரே இடம். இன்றே விஜயம் செய்யுங்கள்.

**HOTEL SEIVAMS [GUEST HOUSE]**

No. 29A, SANGAMITHA MAWATHA,
KOTAHENA, COLOMBO - 13.

T. P. No· 326522

(68212)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்
17 — 03 — 1917



ஆண்டவன் அடியில்
16 — 07 — 1999

அமரர்
## பண்டிதர் மூத்ததம்பி பொன்னையா
( இளைப்பாறிய தலைமை ஆசிரியர் )

ஒற்றுமையே பலம் என்று எம்முறவை
அனுதினமும் அன்பாலே இணைத்தவரே
சற்று நேரத்தில் சடுதியாய் முடிவெடுத்து
சுற்றங்களைத் துறந்து சென்றீர்கள்
முற்றத்து மல்லிகையாய் மணம் பரப்பி எம்மவர்க்கு
அன்பாலே பாலம் அமைத்தவரே!
சுற்றங்கள் ஏங்க எங்கு சென்றீரோ அவ்வழியைப்
பற்றோடு பார்க்கத்தான் மாட்டீரோ?

எமது அன்புத் தெய்வம் சிவபதம் எய்திய செய்தியறிந்து எம் துன்பத்தில் பங்குகொண்டு எமக்காறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் மூலமாக எமது துன்பத்தில் பங்குகொண்டவர்களுக்கும் குறிப்பறிந்து பற்பல உதவிகளைச் செய்த அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று 15-08-99 இல் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

திருநாவலூர்,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(68139)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## கந்தையா தணிகாசலம்
(முன்னாள் இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளரும்
துர்க்கா தேவஸ்தானத்தின் இணைச் செயலாளரும்)

தோற்றம்
24-03-1919

மறைவு
15-08-1989

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப பிரார்த்திக்கின்றோம்,

மனைவி, மக்கள்,
சகோதரி, பேரப்பிள்ளைகள்.

யானைக்குட்டி ஒழுங்கை,
தெல்லிப்பழை.

(சி/8485)

# சுந்தரர் குருபூசை

யாழ்ப்பாணம், ஒக. 15

யாழ் சைவபரிபாலன சபை நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-7)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக. 15

சுந்தரமூர்த்தி நாயனார் குரு பூசை சரசாலை அருள்மிகு சிதம்பர விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சரசாலை இந்து மன்றத்தினர் ஏற்பாட்டில் நடைபெறும் இந் நிகழ்வில் சொற்பொழிவு, கூட்டு வழிபாடு, பூஜை என்பனவும் இடம்பெறவுள்ளன.

(ஐ-ரி)

# வன்னி ஆசிரியருக்கு இடர்காலக் கொடுப்பனவு

வவுனியா, ஒக. 15

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்களுக்கு கடந்த வருட இடர்காலக் கொடுப்பனவை வழங்குவதற்கான 1 கோடி 74 லட்சம் ரூபா செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மூலம் நேற்று முன்தினம் வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

வன்னிப் பகுதியில் திரவப் பணத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்தே இடர்காலக் கொடுப்பனவுக்கான முழுப் பணமும் திரவப் பணமாக அனுப்பி வைக்கப்பட்டதாக வவுனியா அரச அதிபர் தெரிவித்தார்.

(இ-7-164)

# மந்திகை ஆஸ்பத்திரிக்கு 24 மணிநேர மின்

வடமராட்சி, ஒக. 15

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு 24 மணி நேர மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் வைத்தியசாலையின் அனைத்துப் பணிகளுக்கும் தங்கு தடையின்றி மின்சாரம் கிடைத்து வருகிறது.

24 மணிநேர மின்சாரம் தடைப்படும் வேளையில்மாத்திரம் வைத்தியசாலைக்குச் சொந்தமான ஜெனரேட்டரிலிருந்து மின்சாரம் பெறப்படுகிறது.

(3-173)

# திருவாசக முற்றோதல்

தென்மராட்சி, ஒக. 15

சாவகச்சேரி மட்டுவில் கல்வம் சிவன்கோயில் கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் ஏற்பாட்டில் திருவாசக முற்றோதல் வழிபாடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆறு மணி முதல் நடைபெறும்.

(3-117)

# மந்திகையில் டாக்டர் நியமனம்

நெல்லியடி, ஒக. 15

மந்திகை மருத்துவ மனைக்குப் புதிதாக எம்.பி.பி.எஸ். டாக்டர் ஒருவர் சுமார் 14 வருடங்களின் பின்னர் நியமனம் பெற்று வந்துள்ளார்.

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் உள்ளகப் பயிற்சியை முடித்த தென் பகுதியைச் சேர்ந்த டாக்டர் எம். அசீஸ் என்பவரே நியமனம் பெற்றவராவார்.

இவர் தற்பொழுது மந்திகை மருத்துவமனை வெளி நோயாளர் பிரிவுக்குப் பொறுப்பு [illegible] வைத்திய அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

(க-104)


# வீட்டுப் பணியாள் தேவை
[ ஆண்/பெண் ]

காலை 6 மணி – மாலை 6 மணி வரை

வயது: 35 – 50 வரை

வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: அதிதீரன்
மின்சார தொழில்நுட்ப நிலையம்,
77, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

[68183]

# றெனி மூக்குக்கண்ணாடி அகம்



உங்கள் கண்களைச் சரியாகப்
பரிசோதித்துக் கண்ணுக்கு
அழகு சேர்க்கும் கண்ணாடிகளை
உடனுக்குடன் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்

றெனி மூக்குக்கண்ணாடி அகம்

288, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

கண்டி வீதி,
(பிரதேச செயலகம் முன்பாக)
சாவகச்சேரி.

(சி/ 8492)


# நல்லூர் உற்சவம்-1999-வீதித் தடை

மேற்படி உற்சவத்தை முன்னிட்டு கீழ்க் குறிப்பிடப்படும் பாதைகள், தெருக்கள் 15 – 08 – 99 ஆம் திகதி நள்ளிரவு 12. 00 மணியிலிருந்து 11-09-99 ஆம் திகதி நள்ளிரவு 12. 00 மணி வரை வாகனப் போக்குவரத்துக்காக மூடப்பட்டிருக்கும்.

இவ் வீதித்தடை நல்லூர் தேவஸ்தானத்தினரின் ஆலோசனையுடன் அமுல்படுத்தப்படுகிறது.

★ அரசடிச் சந்திக்கும் 2 ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறைவீதியின் அப்பாகம்;

★ பிராமணக்கட்டுக் குளச் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோவில் வீதியின் அப்பாகம்;

★ செட்டித் தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித் தெருவின் வடபாகம்;

★ பஸ் வண்டிகள், மினி பஸ்கள் மற்றும் சுமை கூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி வழியாக நல்லூர் குறுக்கு வீதியூடாகவும் கச்சேரி நல்லூர் வீதிச்சந்தி வழியாகவும் முத்திரைச்சந்தைச் சந்தியூடாகவும் செல்லல்.

எனவே, சகல வாகன உரிமையாளர்களும் இது விடயத்தில் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகிறோம்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/8509)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
08-04-1976



உதிர்வு
27-07-1998

செல்வி
## இரத்தினசிங்கம் ஜெயசீலி
திதி: 15-08-1999

அன்பின் மகளாய் அருமைமிகு சகோதரியாய்
இன்பங்கள் பகிர்ந்து உடன் வாழ்ந்திருந்தாய்
கண்போல வாழ்ந்த பாசமகள் இடைநடுவில்
கண்காணாத்தேசத்தில் காலனிடம் போனதென்ன ?

உன் பிரிவால் கலங்கும்
அன்பு அப்பா, அம்மா,
சகோதரர்கள்:
றூபன், ஜசி, தர்ஷன்.

கலைமகள் வீதி.
நல்லூர் வடக்கு.

[68195]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தெற்கின் குரல்

வன்னி மக்களுக்கு எதிராக அரசாங்கம், உணவு, மருந்துப் பொருள்களை ஆயுதமாகப்பயன்படுத்துவதைக் கண்டித்துக் கொழும்புக் கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டமை பயன்தர வல்ல முயற்சி என்று இப்பத்தியில் எழுதியிருந்தோம்,

அவ்வாறு எழுதிய மை காய்வதற்குள் கொழும்பில் மற்றொரு பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணி லிப்டன் சதுக்கத்தில் நடைபெற்றது. அரசியல் கட்சிகள், மக்கள் அமைப்புகள். போரினால் பாதிக்கப்பட்டோரின் உறவினர்கள் என்று பல தரப்பினரும் ''எங்கள் குரல்'' (அப்பே ஹண்ட) என்ற இயக்கமாகச் சேர்ந்து அந்தப் பேரணியை நடத்தினர்.

ரயில் நிலையத்தின் முன்னால் நடத்தப்பட்ட பேரணியில் கலந்து கொண்டவர்களைப் போலவே, ''எங்கள் குரல்', இயக்கப்பேரணியில் கலந்து கொண்டவர்களும் போரை நிறுத்துமாறு கோரினார்கள். உத்தேச அதிகாரப் பரவல் திட்டத்தை மிகவிரைவில் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்பதும் பேரணி நடத்தியவர்களின் கோரிக்கைகளில் ஒன்றாக இருந்த போதிலும் போர் நிறுத்தப்படவேண்டும் என்பதே பிரதான குரலாக ஒலித்தது.

''எமது அப்பா எப்பொழுது வீடு வருவார்?'' என்று சிறுவர்கள் ஏந்திய பதாகையும் போர் முனையில் உள்ள தமது தந்தையர்கள் விரைவில் வந்து விட வேண்டும்; போர் நிறுத்தப்பட வேண்டும் என்ற உணர்வையே வெளிப்படுத்தியது.

இந்தப் போரில் வெல்ல முடியாது; இந்தப்போர் அர்த்தமற்றது என்று தென்னிலங்கை மக்கள் உணர்ந்து விட்டனர் என்பதனை ''எங்கள் குரலின்'' பேரணி மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

இந்தப் பேரணியில் ஆளுங்கட்சி சார்புடைய அமைப்புகள் மட்டுமன்றி அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களும் பங்குபற்றினர். பேரணியின் பின்னர் பேசிய அமைச்சர் மங்கள சமரவீர —

போரை முடிவுக்குக் கொண்டு வந்து நிரந்தர அமைதியை உருவாக்குமாறு அரசையும் எதிர்க்கட்சியையும் கேட்கும்குரல் ஒலிக்கத் தொடங்கியுள்ளதால், சமாதானத்தை விரும்பும் மக்களின் அபிலாஷை நிறைவேறும் — என்று நம்பிக்கை தெரிவித்தார்.

மற்றோர் அமைச்சர் பட்டி வீரக்கோன் பேசுகையில் —

போரின் கொடுமையை நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் உணரத தொடங்கியுள்ளனர், இனப்பிரச்சினையைப் போரினால் மட்டும் தீர்த்துவிட முடியாது; அரசியல் தீர்வே தேவை — என்று சொன்னார்

இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கொண்டு வருவதற்கும், அதிகாரப்பரவல் திட்டத்தை நிறைவேற்றவும்அரசாங்கத்துக்கு எதிர்க்கடசியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு தேவை என்பது சரியானதே. ஆனால் போரை நிறுத்தி மக்கள் படும் இன்னல்களை, அல்லல்களை அரசு தானாகவே நீக்கலாம். அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவோ ஒத்துழைப்போ தேவையில்லை.

போர் நிறுத்தப்படவேண்டும் என்று தென்னிலங்கை மக்கள் பலமாக ஒலித்த பின்னர், அமைச்சர்கள் அதனை நேரில் கேட்டபின்னர், போரை நிறுத்துவதற்கு தயக்கம் ஆகாது அது குறித்து உடன் அமைச்சரவையின், அரசாங்க உயர் பீடத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்து போரை நிறுத்த ஏற்பாடு செய்யவேண்டும். அவ்வாறு செய்யாவிடில் வழமையான இரட்டைவேட நாடகமாகவே முடியும். அமைதியும் சமாதானமும் கிட்டவும் நெருங்க மாட்டா.

# யாழ். மீனவர்களுக்கு தொடர்ந்தும் ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் உதவி

யாழ்ப்பாணம், ஓக. 15

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், யாழ்ப்பாண மீனவர்களுக்குப் பாரம்பரிய மீன்பிடிக் கலங்களான வள்ளம், கட்டுமரம் ஆகியவற்றை வழங்குவதில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளது.

''யாழ்ப்பாண மீனவ சமூகத்துக்கு உதவுவதற்காக ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் பாரம்பரிய மீன்பிடிக் கலங்களைக் (கட்டுமரம், வள்ளம்) கொள்வனவு செய்துவிநியோக நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டு விட்டது என்று சில செய்தி ஊடகங்களில் வெளியாகும் தவறான அறிக்கைகளையிட்டு நாம் ஆச்சரியப்படுகின்றோம். இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு நாங்கள் கொள்வனவிற்கும் விநியோகித்தலுக்குமான வேறு வழிவகைகளைத் தேடும் அவசர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்''.

மேற்கூறியவாறு ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அமைப்புத் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1998 ஒக்ரோபரில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் சுழற்சி முறையிலான நுண்கடன் அடிப்படையில், மீனவ கூட்டுறவுச் சங்கங்களினூடாக யாழ். குடாநாட்டிலுள்ள மீனவர்களுக்கு வள்ளத்தையும் கட்டு மரங்களையும் வழங்கும் இரு பிரிவுகளைக் கொண்டதாகும்.

உள்ளூரில் கிடைத்த வளங்களைக் கொண்டு 1999 மார்ச் வரை யாழ்ப்பாணத்தில் வள்ளம் கட்டும் வேலைத் தளத்தில் 15 வள்ளங்கள் அமைக்கப்பட்டன. பயனாளிகளிடம் இருந்து பெற்ற மீளச் செலுத்துகையைப் பயன்படுத்தி மேலும் 3 வள்ளங்கள் கொள்வனவு செய்யப்பட்டுப் பாவிக்கப்படுகின்றன.

கட்டுமரப் பிரிவு இலங்கையின் மத்திய மாகாணத்திலிருந்து கொள்வனவு செய்யப்படும் அல் பிசியா மரத்தின் கொள்வனவிலும் விநியோகத்திலும் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் 75 கட்டுமரங்கள் கட்டுவதற்கான அல்பீசியா மரங்களைக் கொள்வனவு செய்து விநியோகிக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடமராட்சி மீன்பிடி சமாசத்திற்கு 15 லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

1999 ஜூலை மாத முடிவு வரை இந்தச் சமாசம் 9 கட்டு மரங்களை மட்டுமே வழங்கக் கூடியதாக இருந்தது. தேவையான மூலப் பொருள்களைக் கொண்டு வருவதில் தாம் பிரச்சினைகளை எதிர் நோக்குவதாக மீனவ சமாசம் தெரிவித்தது.

மரங்களைக் கொள்வனவு செய்து விநியோகிப்பதற்கான புதிய வழிவகைகளை அவசரமாகத் தேடும் பொருட்டு மீன்பிடி சமாசத்தினால் பயன்படுத்தப்படாத மிகுதித் தொகையை மீளப் பெறுவதென ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் முடிவெடுத்துள்ளது.

மேற்படி கொள்வனவு செய்தலும் விநியோகித்தலுமான நடைமுறை தொடர்வதுடன் பல்வேறு வகையான விநியோகத்தர்களிடம் இருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தத் திட்டம் சம்பந்தமாக வடமராட்சி மீனவசமாசம் எதிர்நோக்கிய பிரச்சினைகளை ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் புரிந்து கொண்டுள்ளதுடன் இத் திட்டத்திற்கு அவர்கள் வழங்கிய உதவிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

இத் திட்டத்தினை யாழ்ப்பாண மீனவ சமுதாயத்துக்கு முழுமையாக வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் உறுதியாக இருப்பதுடன் முன்னுரிமையும் கொடுக்கிறது—என்றுள்ளது. (உ)

## 18 பேர் குருநகர் வருகை

வன்னியில் இருந்து யாழ். குடாக்கடல் ஊடாக கடந்த திங்கள் 18 பேர் வந்துள்ளார்கள்.

இவர்கள் சிநோர் இடைத் தங்கல் முகாமில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மீண்டும் யாழ். குடாக்கடல் ஊடாக வன்னியில் இருந்து மக்கள் யாழ். வரத்தொடங்கியுள்ளனர். (ஐ—86)

## இன்று

சுன்னாகம், ஓக. 15

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் இலவச மருத்துவ சிகிச்சையும் கண் பரிசோதனையும் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் இன்று ஞாயிறு காலை 9.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

லயன் டாக்டர் வி. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் அளவெட்டி, மல்லாகம், ஏழாலை ஆகியகிராமங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் பல நோயாளர்களும் பயன் பெறவுள்ளனர். [ஐ-ரி-152]

★ ★ ★

யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் நடுவர்களுக்கான 2ஆவது பயிற்சி வகுப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இதேவேளை—

தாச்சி விளையாட்டு நடுவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 22ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]

★ ★ ★

கலை மகிழ் நன் இசைமாமணி வி. கே. பாலசிங்கத்தின் கலைப்பணி கௌரவிப்பு விழா இன்று ஞாயிறு மாலை 5 மணிக்கு வதிரி கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்கலவன்பாடசாலையில் ஆசிரியர் தி சுபாகரன் தலைமையில் நடைபெறும்.

அதிபர் பா. வெற்றி வேல் வரவேற்புரை நிகழ்த்துவார். சிறப்பு விருந்தினர்களாக அதிபர் செ. சதானந்தன் ஆசிரியர் பா. இரகுவரன் வீ. ஜீ. தங்கவேல் ஆகியோர் கலந்து கொள்வர். [ஐ-109]

# மனிதகுல மேம்பாட்டிற்கு வழிவகுத்த கன்னி மரியாளின் இறை அர்ப்பணம்

**அருட்சகோதரர் ச. அருளப்பா**

ஆதியிலிருந்தே இறைவன் தனது திட்டத்துக்கு ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்தார். அவள் தான் தாவீதின் குலத்தில் உதித்த கன்னிமரியாள். மரியாள் சிறு வயதிலிருந்து இறைவனுக்குத் தன்னை முழுதும் கையளித்து வாழ்ந்தவள்.

காலம் நிறைவேறிய பொழுது கபிரியேல் தூதர் வழியாகமாபெரும் நற்செய்தியொன்று மரியாளுக்கு அறிவிக்கப்பட்டது. இறை விருப்பத்துக்குத் தன்னை முழுதும் கையளித்த மரியாள் இச்செய்தியை ஏற்றுக்கொண்டாள்.

மனித மீட்புக்கு தன்னையும் இணைத்துக் கொண்டு வாழ்ந்த மரியாள் இறுதிவரை அப்பணியை மேற்கொண்டு வாழ்ந்தாள். தனது உறவினளான எலிசபேத்தை வாழ்த்திய பொழுது அவள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பெற்று ''பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே...... ஆண்டவர் சொன்ன வாக்கு நிறைவேறும் என்று விசுவாசித்தவள் பேறுபெற்றவளே'' என்று மரியாளைப் போற்றிப் புகழ்ந்தாள். மரியாள் இப்புகழ்ச்சிக்கு முற்றிலும் தகுதியுடையவள். எவ்வளவுக்குத் தன்னை இறைவனின் அடிமையாக்கினாளோ அவ்வளவுக்கு இறைவன் மரியாளை மேன்மைப்படுத்தி எல்லா இனமக்களும் அவளைப் போற்றிப் புகழ்ந்து பாடுகின்றனர். எல்லா வரப்பிரசாதங்களுக்கும் இவள் ஒரு வாய்க்காலாகத் திகழ்கின்றாள்.

**ஞாயிறு நற்பிரசாதம்**

மரியன்னை விண்ணேற்படைந்தாலும் அவளது பார்வையும் நோக்கமும் உலகின் மனமாற்றமாகவே இருக்கிறது. நாம் மனம்மாறா விட்டால் விண்ணகம் செல்ல முடியாது. பெல்ஜியம், போர்த்துக்கல்— பாத்திமாநகர், மெக்சிக்கோ— குவாடலூப்பே, பிரான்ஸ்— லாசலேட், பிரான்ஸ்— லூர்துநகர், இந்தியா— வேளாங்கண்ணி ஆகிய திருத்தலங்களில் அன்னைதரிசனம் கொடுத்து மக்களை மனமாற்றத்துக்கென அழைப்பு விடுத்திருக்கின்றாள். பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்களுக்கு இறைவாக்கினர் இதே செய்தியைத் தான் கூறியுள்ளனர். இறுதி இறைவாக்கினராகிய புனித திருமுழுக்கு அருளப்பரும் கிறிஸ்து வருகைக்காக மக்களை மனந்திரும்ப அழைப்பு விடுத்தார் ''மனந்திரும்புங்கள், ஏனெனில், விண்ணரசு நெருங்கி விட்டது''என்பதாக.

'உயர உயரப் பறந்தாலும் கழுகின் பார்வைபூமியில்தான் என்பதைப் போல் விண்ணேற்பு அடைந்தாலும் மரியாளின் சிந்தனையெல்லாம்தனது பிள்ளைகளின் கரிசனையில் தங்கி உள்ளது தனது பிறப்பிலிருந்து இறுதி வரை இறைவனின் விருப்பத்தையே நிறைவேற்றி வந்தாள் அந்த அன்னை. இறைவன் அவளை எல்லா அருள் வளங்களாலும் நிரப்பி அரும் பெரும் செயல்களைச் செய்துள்ளார். அவள் பெற்ற வெற்றி கிறிஸ்துவைப் பின்பற்றி வாழும் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாகக்கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. இதையே இன்றைய விழா எமக்கு உணர்த்துகின்ற உறுதிவாக்கு

இரண்டாம் உலகப்போரில் போர் விமானியாகப் பணிபுரிந்த தோமஸ் என்பவரின் விமானம் அடர்ந்த காட்டுக்குள் விழுந்து நொருங்கியது. இவ்விதம் பல விமானங்கள் அவ்விடத்தில் விபத்துக்குள்ளானது ஆனால் யாரும் உயிரோடு திரும்பவில்லை. ஆனால் தோமஸ் மட்டும் உயிரோடு திரும்பி வந்தான். பத்திரிகை நிருபர்கள் அவரிடம் கேட்டபொழுது எல்லாம் செபத்தின் வல்லமை எனத் தியாகக் கூறினான். எனது விமானம் விபத்துக்குள்ளானபோது 'அருள் நிறைந்த மரியே வாழ்க' என்ற செபத்தை உரத்த குரலில் பல தடவைகள் சத்தமிட்டுச் செபித்தேன். நான் உயிர் பிழைத்ததற்குக் காரணம் விசுவாசமுள்ள செபமும், அன்னை மரியாளின் ஆதரவுந்தான் எனக்கூறினார்.

மரியாளின் விண்ணேற்பு என்ற இந்த வேத சத்தியம் பன்னிரண்டாம் பத்திநாதர் பாப்பரசரால் 1950 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது.

அன்னை மரியாள் பேறு உடையவளாக விண்ணகத்தில் இருந்தாலும், பாவிகளாகிய எம்மைக் கைவிடாமல் எப்பொழுதும் ஆதரவும் பரிவும் உடையவளாக நமக்காக இறைவனிடம் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறாள். ★

## நாளை

ஆடி 31

திங்கட்கிழமை

திதி: பஞ்சமி

பிற்பகல் 4.36 வரை.

நட்சத்திரம்: சித்திரை முழுவதும்

கருட பஞ்சமி நாள்

சுபநேரம்: 12.05—1.35

ராகுகாலம்: 7.35—9.05

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

மனம் வாக்கு காயங்களால் பிறருக்கு நீ செய்யக்கூடிய உதவியை உன்னால் ஆகாதென்று மறைத்துச் சொல்லாதே.

—ஔவையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான முயற்சிகளுக்கு மத்தியிலும் யுத்தத்துக்கான தயாரிப்புகள் தீவிரம்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான இணக்கப்பாடு ஒன்றினைக் காண வேண்டும் என்ற வகையில் பல்வேறு மட்டங்களிலும் பேச்சு வார்த்தைகளும் ஆர்ப்பாட்டப் பேரணிகளும் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் தேசிய மட்டத்திலும் சர்வதேசிய மட்டத்திலும் அழுத்தங்களை உருவாக்கி வரும் வேளை மறுபுறத்திலோ யுத்த நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

வடக்கிலும் வன்னிப் பெருநிலப்பரப்பிலும் நிலைகொண்டுள்ள யுத்த நடவடிக்கைகள் கிழக்கிலும் பற்றிப் பரவுவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்ந்து கொண்டே வருகின்றன. பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற பெயரில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கடந்த சில தினங்களாகவே பொலீஸாரும் படையினரும் சோதனைகளையும் சுற்றிவளைப்புக்களையும் தேடுதல்களையும் மேற்கொண்டு வருகின்றனர். கிழக்கின் எல்லைப் புறக்கிராமங்களில் யுத்த நடவடிக்கைகள் தீவிரம்பெற்று வருகின்றன.

திருகோணமலை நகரில் கடந்த சில தினங்களின் முன்னர் சயனைட் குப்பியுடன் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக பொலீஸார் தெரிவித்ததைத் தொடர்ந்து நகரில் விடுதலைப்புலிகள் நுழைந்ததாகத் தெரிந்துள்ள பொலீஸாரும் படையினரும் நகரைக் கலக்குக் கலக்கி வருகின்றனர். சோதனைகள் என்ற பெயரில் சிறு குழந்தைகள் கூட சோதனை செய்யப்படும் அவலம் தற்போது கிழக்கில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

கடந்த புதனன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் வரலாற்று சிறப்பு மிக்கதான மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்தோற்சவ விழா இடம்பெற்றுள்ளது. இந்த ஆலய உற்சவத்திற்கு திருகோணமலையிலிருந்து சென்ற பயணிகள் மன்னம்பிட்டி பகுதியில் நடத்தப்பட்ட விதம் பற்றிக் கூறும் போது நாமும் இந்த நாட்டின் பிரஜைகள் தானா? என்ற சந்தேகமே எழுந்துள்ளது. தீர்த்த உற்சவத்திற்குச் சென்ற அடியார்கள் திரும்பி வந்த வேளை அவர்கள் கொண்டு வந்த முகப்பவுடர் பெட்டிகள் மட்டுமன்றி சிறுகுழந்தைகளும் மிகக் கவனமாக சோதனையிடப்பட்டுள்ளனர்.

இந்த நாட்டில் உருவான இனப்பிரச்சினை தமிழ் மக்களை மட்டுமன்றி சிங்களவர்களைக் கூட மன உளைச்சலுக்கும்உடல் தாக்கத்திற்கும் இலக்காகி உள்ள வேளை என்றுமறியாத பச்சிளம் பிஞ்சுகள்கூட சோதனை என்ற பெயரில் சோதனை இடப்படும் போது அந்தக் குழந்தைகள் உடல், உள தாக்கங்களுக்கு இலக்காகும் நிலையினை எந்த வகையில் தடுக்க முடியும்?

ஆரோக்கியபூர்வமான ஒரு சமுதாயத்தின் நாற்றங்கால்கள் இன்று இடம்பெறும் இனவாத யுத்தத்தின் விளைவாகச் சீரழிந்து கொண்டிருக்கின்றன. யுத்தத்திற்குப் பொறுப்பானவர்கள் அதன் எதிரொலியாக இடம்பெறும் சம்பவங்களை உள்நாட்டிலும் வெளிஉலகிலும் பெரிதுபடுத்திக் காட்ட முனைகின்றனரே அன்றி இதன் அடித்தளத்தினை அணுகி அதற்கான தீர்வினைக் காண முயலாது விதண்டாவாதம் பேசிக் கொண்டு வீணான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் என்று வெகு அழகாகக் கூறிவிட்டு ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணியும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியும் தமிழ் மக்களை வைத்து சித்து விளையாட்டு விளையாடிக்கொண்டிருக்கின்றன. இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகளும் காவு கொடுத்துக் கொண்டிருப்பது தான் வேடிக்கைக்கும் வியப்புக்கும் உரிய விடயமாகும்.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான யோசனைகளை அரசு முன்வைக்கும் போது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியோ இலங்கை இந்திய ஒப்பந்தத்தினைப் புரட்டிப் பாருங்கள். அதன் பிரகாரம் சென்றால் நாம் தீர்வுத் திட்டம் தொடர்பாகப் பரிசீலிப்போம் என்று கூறுகின்றனர்.

இல்லாத தீர்வுக்கு வழிகாட்டப் புறப்பட்டவர்களைப் போன்று இந்த இரு சாராருமே தமிழ் மக்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை கொள்கைப்படுத்தியும் தமிழர்களை வந்தேறு குடிகளாகவும் கணித்து இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று கூறியவர்களை இன்று இராட்சகர்களாக வரமுனையும் வேளை சமாதானப் புறாவினை தோளில் பறக்க விட்டு பதவிக்கு வந்தவர்களோ வரிந்து கட்டிக் கொண்டு போர் முனையில் வீரம் பேசப் புறப்பட்டுள்ளனர்.

அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட உள்ளது. இன்று இடம்பெறும் இந்த பேச்சு வார்த்தைகளைப் பெர்றுத்த இந்த இரண்டு கட்சிகளும் தமிழ் மக்களின் வாக்குகளை எந்த வகையில் பெறலாம் என்ற வகையிலே தீர்வுத் திட்டம் தொடர்பான அறிக்கைகளை விடுத்து வருகின்றன. தேர்தல் வேளை நெருங்கி வரும்போதெல்லாம் இந்த இரு கட்சிகளும் தமிழ் மக்களை வாக்கு வங்கிகளாகவே

]11 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலைத் திருமுகம்

— சங்கீத் —

## கிழக்கில் அதிகரிக்கும் பாதுகாப்புக் கெடுபிடிகள்

## நினைவுக்கட்டுரை

உதயன் 8—8—1999 ஆம் திகதிய இதழின் "சூரிய காந்தி" சிறப்பம்சம் பகுதியில் "இந்து நாகரிகத் துறை அமைவதற்கு முன்னோடி பேராசிரியர் சதாசிவமே" என்ற தலைப்பில் வெளியான கட்டுரை அவரது பத்தாவது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டியதாகும்.

## ரஷ்யாவில் இயந்திர மனிதன் செய்த இதய சத்திரசிகிச்சை!

உலக வரலாற்றில் 1998 ஆம் ஆண்டில் மருத்துவ அதிசய சத்திரசிகிச்சை ஒன்று நிகழ்ந்துள்ளது. "றொபோ" எனப்படும் இயந்திர மனிதனின் உதவியுடன் இதய சத்திரசிகிச்சையொன்றை நிகழ்த்திக் காட்டினார் 64 வயதான பிரெஞ்சு வைத்தியர் அலன் கார்ப்பன்டே. பிரான்சில் உள்ள புரூஸ் வைத்தியசாலையில் நிகழ்ந்த இந்தச் சத்திர சிகிச்சையின்போது வைத்தியரின் ஆணைக்கேற்ப கணனி "றொபோ" சிகிச்சை செய்தது.

அலன் கார்பன்டே கணனித்திரையின் முன் அமர்ந்திருந்தார். திரையில் முப்பரிமாண இதயத் தோற்றம் பெறப்பட்டிருந்தது. நோயாளிக்கு இதய அறை வால்வுகளினது மாற்றமும், குருதிச்சுற்றோட்ட ஒழுங்காக்கலும் தேவையாயிருந்தது.

கணனித் திரையில் வரவழைக்கப்பட்ட உள் இதயவறை முப்பரிமாணத் தோற்றத்தைப் பார்த்தபடி கட்டளைகளைப் பிறப்பித்தார் கார்ப்பன்டே.

### தகவல் மேடை

நெஞ்சறையின் இதயப் புறமாக இடப்பட்ட ஒரு சென்ரிமீற்றரிலும் குறைவான நீளமுடைய துவாரத்தின் மூலம் தேவையான உபகரணங்களைச் செலுத்தி சத்திரசிகிச்சையை மிகப் பெரிய வெற்றியுடன் முடித்துக் கொடுத்தது. "றொபோ" தன் கட்டளைப்படி நடைபெறும் சிகிச்சையைத் திரையில் பார்த்துக்கொண்டிருந்தார் கார்ப்பன்டே. அவர் தன் அனுபவத்தைக் குறிப்பிடும்போது, "நான் அந்த இதய அறைக்குள் இருந்து இந்தச் சத்திரசிகிச்சையைச் செய்வித்தது போல் இருந்தது" என்கிறார்.

அதுமட்டுமல்லாது இந்தச் சத்திரசிகிச்சையை மற்றைய சத்திரசிகிச்சைகளுடன் ஒப்பிடும்போது மிகமிக நுணுக்கமான முறையில் மிகச் சரியான பகுதிகளில் செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

"றொபோ" மனிதனால் சத்திரசிகிச்சை நிபுணரினால் வரைபுபடுத்த முடியாத நுண்ணிய பகுதிகளிலேயே மாற்றங்கள் செய்ய முடிகிறதாம். இதேபோல உடலின் ஏனைய பகுதிகளிலும் கணனியின் உதவியோடு சத்திரசிகிச்சை செய்ய முடியுமென கார்ப்பன்டே நம்புகிறார். அதிசயம்தானே!

இந்தக் கணனியின் பெருமைதான் என்னே. தமிழர் நாம் கண்ணில் காணும் நாள்தான் எப்போது?

— நன்றி: ஓடம் சஞ்சிகை

(திவோ தமிழ் மாணவர் ஒன்றியம், ரஷ்யா)

## சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# கூட்டுறவாளரின் வரலாற்றை ஆவணப்படுத்தும் ஓர் அரிய நூல்

### நூல் வரிசை

**நூல்: கோப்பாய் வரலாறு – கூட்டுறவு**
**ஆசிரியர்: க. இ. குமாரசாமி**

**பா. தனபாலன்**

எமது சமுதாய மரபுகளையும், முன்னைய நிகழ்வுகளையும் தகவல்களையும் இளைய தலைமுறையினருக்கு மிக முக்கியமானதாக வரலாற்றில் கொள்ளப்படுகின்றது. மனிதனின் நிழல் தொடர்வது போல ஓர் இனத்தின் பாரம்பரியமும் தொடர்ந்து அறியப்படல் வேண்டும். பாரம்பரியத்தை முற்றாக மறப்பின் அந்த இனமும் மறைந்துவிடும் என்ற அவாவுடன் மூதறிஞர் க இ. குமாரசாமி அவர்கள் கோப்பாய் வரலாறு — கூட்டுறவு என்ற நூலை எழுதியுள்ளார். இந்நூல் குறிப்பாக யாழ்ப்பாணத்துக் கூட்டுறவாளர்களுக்கு ஓர் ஆவணமாக மிளிர்கின்றது. அத்துடன் கோப்பாய் கிராமத்தின் வரலாற்றுச் சம்பவங்களுடன் இணைக்கப்பட்டு யாழ்ப்பாண வரலாற்றை அறியவும் மேலும் ஆராயவும் இந்நூல் வழிகாட்டியாகவும் உள்ளது.

இலங்கையில் கூட்டுறவின் ஒரு முன்னோடியாக யாழ். மாவட்டம் இருந்து வந்தது. யாழ்ப்பாண மக்கள் நலன் காக்க உருவான வடமாகாண கூட்டுறவு அமைப்புக்களின் ஆரம்பமும் வளர்ச்சியும், அதுகண்ட சோதனைகளையும் இடர்பாடுகளையும் பல தகவல்களாக நூலில் திரட்டப்பட்டுள்ளது. நூலாசிரியர் தனது 85 ஆவது வயதிலும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டு நூலை வெளியிட்டுள்ளமை போற்றுதலுக்குரியதாகும்.

தனது அனுபவங்களை அழகாக வெளிப்படுத்தி தோல்வியில் முடிந்த முயற்சிகளுக்கு வெற்றி தரக் கூடிய வழிகள் எவை என்பதையும் ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ளார். எந்தப் பொது ஸ்தாபனமாக இருந்தாலும் மக்கள் கூட்டமாகக் கூட்டுறவாகச் செயற்பட்டால்தான் அந்த ஸ்தாபனம் உரிய, உயரிய மக்கள் சேவையை ஆற்ற முடியும். இதற்கு உதாரணமாக கோப்பாய் கிராம வரலாற்றினையும் இத்துடன் இணைத்து ஒரு பூரணமான நூலாக வெளிவந்துள்ளது.

இந்நூலில் கோப்பாய் கிராம மற்றும் கூட்டுறவுத் துறை வரலாறுகள், இலங்கையின் அரசியல் மாற்றங்களும் அதனால் ஏற்பட்ட தாக்கங்களும் விபரிக்கப்பட்டுள்ளது. ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தில் சைவத்தையும் தமிழையும் மழுங்கடிக்கத் திட்டமிட்டமை, இதன் ஆரம்ப கட்டமாக யாழ்ப்பாணத்திலுள்ள காணிகளுக்கு தோம்பு எழுதி வரி அறவிட சிங்கள முதலிமாரை இவ்விடம் கொண்டு வந்து ஊர், குறிச்சி, காணிப் பெயர்களை எழுதும் போது வேற்று மொழிப் பெயர்களாக எழுதப்பட்டமையையும் ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

யாழ்ப்பாணஉப்பாற்றுதிட்டம் கோப்பாய் பிரதேசக் கோயில்கள், பெரியார்கள், அவர்களுடைய சேவைகள், வாசிகசாலைகள், பாடசாலைகள், கல்லூரிகள், கூட்டுறவு அமைப்புக்கள் என்பவை பற்றியும் விரிவான தகவல்கள் உள்ளன. இவை யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுடன் தொடர்பு படுத்தப்படும்

[8 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாண்டிக்குளம் முதல் மாங்குளம் வரை

# கண்டிவீதி ஊடான பயணத்தின் அனுபவம்

**வவுனியா வலம்**
-ரா.இளவரசன்-

வன்னிப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல சொல்கிறார் ''நான் இது வரை கால வாழ்க்கையில் எனது மனைவிக்குக்கூட இவ்வளவு கடிதங்களை எழுதியது கிடையாது'' என்று.

''நான் அதற்கும் மேல் இதுவரை இராணுவ அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவுக்குமாக மொத்தம் 96 கடிதங்கள் எழுதிவிட்டேன்'' என்கிறார் வவுனியா அரச அதிபர் கே. கணேஷ்.

இவ்வாறு எல்லோரும் குத்தி, எல்லோரும் இடித்து அரிசி வந்துவிட்டது. கடந்த 43 நாள் இடைவெளியின்பின் வன்னிக்கான பாதை திறக்கப்பட்டு விட்டது.

கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை வன்னிக்கான பாதை திறக்கப்பட உள்ளதாகவும் செய்தியாளர்கள் அங்கு அழைத்துச் செல்லப்பட உள்ளதாகவும் ஞாயிறு இரவில் அறிவிக்கப்பட்டது. காலையில் கமெராக்கள், கஸற்றுக்களுடன் வவுனியாவிலுள்ள செய்தியாளர்கள் அனைவரும் பஸ்நிலையப் பகுதியில் குழுமினர்.

சரியாக 8.00 மணியளவில் இராணுவவாகனம் ஒன்றுடன் கப்டன் திலக் சேனநாயக்க செய்தியாளர்களுக்காக காத்திருந்தார். செய்தியாளர்கள் அனைவரும் அதிலேறி மாங்குளம் நோக்கிப் பயணப்பட்டோம். வவுனியா நகரப்பகுதியிலிருந்து சுமார் 5 கிலோமீற்றர் தொலைவிலிருக்கும் தாண்டிக்குளத்தில் எமது வாகனம் இராணுவப் பொலீஸாரினால் மறிக்கப்பட்டது. விவரத்தைச் சொன்னதும் எமது பெயர்களும் வாகன விவரங்களும் பதிவு செய்யப்பட்டபின் தொடர்ந்துசெல்ல அனுமதிக்கப்பட்டோம். தாண்டிக்குளத்திலிருந்துமாங்குளம் வரைக்கும் எந்தவித சோதனைச் சாவடிகளையோ வேகத் தடைகளையோ நாம் எதிர் கொள்ளவில்லை. இராணுவ நடமாட்டங்களைத் தவிர வேறெந்த சிவில் முகங்களையும்காணமுடியவில்லை. கண்டிவீதியை நெடுகிலும் பெண் இராணுவத்தினர் காவல் கடமையில ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மற்றும்படி ஓமந்தை, புளியங்குளம், கனகராயன்குளம், மாங்குளம் ஆகிய சந்திகளில் மட்டும் இராணுவத்தினர் முகாம்களை அமைத்து நிலை கொண்டிருந்தனர்.

தாண்டிக்குளத்திலிருந்து — மாங்குளம் வரை கண்டி வீதியின் இருமருங்கிலும் சுமார் 500 மீற்றர் தூரத்துக்குமேல் கட்டடங்கள் அனைத்தும் இடிக்கப்பட்டு பற்றைகள் வெட்டப்பட்டு மரங்கள் தறிக்கப்பட்டு வெட்டவெளியாக — மைதானம்போல்— காட்சியளித்தது.

முன்னர் தாண்டிக்குளம் ஊடாக மக்கள் பயணம்செய்யும்போது படையினரின் எல்லைக்கும் புலிகளின் எல்லைக்குமிடையில் இருக்கும் நரசிம்மர் ஆலயத்தில் பயணம் நல்லதாக வேண்டுமென நேர்த்தி வைத்துச் செல்வது வழக்கம். அந்தக் கோயில் அப்படியே பற்றைகள் சூழ இருக்கிறது. எப்போதோ யாரோபோட்ட மாலை ஒன்று நரசிம்மர் கழுத்தில் இன்னமும் தொங்கிக்கொண்டிருக்கின்றது. அதற்குப் பின் அப்பால் முன்னர் புலிகளின் பாஸ் பரிசோதனை செய்யும் இடமாக இருந்த இடத்தில்சிறு காவலரண்கள் இருக்கின்றன.

தொடர்ந்து, வெட்டவெளிக்கு மத்தியில் ஓமந்தை அந்தோனியார் ஆலயம் சுற்றிவரத் துப்பரவாக்கப்பட்ட நிலையில் ஒழுங்காக— சேதங்களின்றி— இருக்கிறது. ஓமந்தைச் சந்தியில் பாடசாலை, ஆஸ்பத்திரி மற்றும் சிமெந்தினால் கட்டப்பட்ட கடைகள் மட்டும் சேதமின்றி இருக்கின்றன. அவைகள் உருமறைப்புச் செய்யப்பட்டு இராணுவ முகாமாகக் காட்சியளித்தன. தொடரும் பயணத்தில் 'இவடம் எவடம்' என்று தெரியாத நிலையில் இருந்த எமக்கு அட புளியங்குளமா இது? என்ற சந்தேகம் ஏற்பட்டது. ஒரு சந்தியும் அதன் ஓரத்தில் தமிழீழத்தைக் குறிக்கும் உருவச்சிலை ஒன்றும் ஏகப்பட்ட ஓட்டைகளுடன் ஏதோ ஓர் ஆதாரத்துடன் நின்றுகொண்டிருந்தது அதனை நிரூபித்தது.

இங்கேயிருந்த கட்டடங்கள் கடைகளெல்லாம் எங்கே என்று ஆச்சரியப்பட்டுக் கொண்ட எமக்கு மீண்டும் வெட்டவெளி. ஒரு கோயிலொன்று நான்கு தூண்கள் மட்டுமிருக்க அருகில் ஒரு தேர் எலும்புக்கூடாக நின்றது.? ஓ! இது புளியங்குளம் முத்துமாரியம்மன் ஆலயம் போல் இருக்கிறது. என்று ஊகித்துக்கொண்டோம். மீண்டும் வெளி.

புதூர் நாகதம்பிரான் ஆலயத்துக்குச் செல்லும் சந்தியில் சிறு ஆலயம். அதற்கு அப்பால் எங்கே நிற்கிறோம் என்று தெரியாதளவிற்கு எல்லாம் இடிக்கப்பட்டுத் தறிக்கப்பட்டுக்கிடக்க அந்த வெட்டவெளிக்கப்பால் கனகராயன் குளம் பெயர்ப்பலகை மட்டும் முகம்காட்டி மறைந்தது.

தொடர்ந்து மாங்குளம் சந்தியில் தபால் நிலையத்தின் ஒற்றைச்சுவர் எப்படியோ தாக்குப்பிடித்து நிற்க மாங்குளம் சந்தியிலுள்ள தேவாலயம்—மாங்குளம் முகாம் ஏற்கனவே 90 இல் போர்க் என்ற கரும்புலியினால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் அழித்தொழிக்கப்பட்டபோதும் சேதமில்லாமல் நிமிர்ந்து நின்ற மாங்குளம் அக்னேசம்மாள் தேவாலயம் தற்போது முகப்பிலும் பீடத்தின் பின்னாலும் இரு சுவர்களை மட்டும் கொண்டிருக்கிறது. மற்றப்படி மாங்குளம் சந்தியில் இருந்த கடைகள் தொடர்ந்திருந்த வீடுகள் மாங்குளம் மகா வித்தியாலயம் எல்லம் மண்ணோடு மண்ணாகிப் போய்விட்டன

மாங்குளம் சந்தியிலிருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தொலைவில் அதாவது கண்டி வீதியின் 224 ஆவது மைல் கட்டையில் இருந்து சுமார் அரைமைல் தூரத்தில் இராணுவத்தினரின் எல்லைப் பகுதி இருக்கிறது. கண்டிவீதியில் மட்டும் பாதைக்காக ஓர் இடைவெளி விட்டு இரண்டு

[08 ஆம் பக்கம் பார்க்க]

**சூரியகாந்தி**
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# இன்பம்என்றசொல்லைக் கேட்டதுண்டு;

## அது என்றாவது எங்கள் வீட்டுப்பக்கம் வந்ததுண்டோ?

**இலங்கையின் மிக மூத்த பத்திரிகை ''உதயதாரகை'' அது 1841 ஆம் ஆண்டிலிருந்து வெளிவரும் குடாநாட்டின் முதலாவது வாரப் பத்திரிகை.**

**'' வன்னியின் அவலம் '' என்ற தலையங்கத்தில் 13—08—1999 ஆம் திகதிய ''உதயதாரகை'' யின் ஆசிரியர் தலையங்கத்தை இங்கு மறு பிரசுரம் செய்கின்றோம்.**

ஒரு மாதத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இரணகோச நடவடிக்கையைத் தொடர்ந்து. வன்னிப்பிரதேசம் துண்டிக்கப்பட்டது. அங்கு என்ன நடைபெறுகின்றது? மக்கள் எப்படி வாழ்கின்றனர்? வைத்திய சேவைகள் எவ்வாறு நடைபெறுகின்றன? விமானத் தாக்குதல்கள் நடைபெறுகின்றனவா? என்பதைப்பற்றி நாம் ஒன்றும் அறியாதவர்களாகவேயிருக்கிறோம். அங்கு அல்லற்படும் அனைத்து மக்களும் தமிழ் மக்கள். ''தான் ஆடா விட்டாலும் தன்சதை ஆடும்'' என்பார்கள். வன்னி மக்களின் அவலத்தைக் குறித்து நாம் ஒவ்வொருவருமே மனம் கலங்கி நிற்கின்றோம்.

வன்னியில் வாழுகின்ற மக்கள் பெரும்பாலும் ஏழை மக்கள். 1958, 1977, 1981, 1983 களின் கலவரங்களைத் தொடர்ந்து அங்குகுடியேறிய இந்திய வம்சாவளி மக்கள்; விவசாயத்திட்டங்களில் குடியேறுவதற்காகச்சென்ற தீவுப்பகுதி மக்கள்; பரம்பரையாக வாழ்ந்து வந்த பூர்வீக குடிகள்; 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற சூரியகதிர் நடவடிக்கையைத் தொடர்ந்து இராணுவத்தின் செயற்பாடுகளுக்கு பயந்து அங்கு சென்று குடியேறியவர்கள். இந்த மக்கள் கடந்த 9 வருடங்களாக அனுபவித்து வருந்தொல்லைகளை வார்த்தைகளால் எடுத்துக் கூறவே முடியாது. வீடுகள் இல்லை. பெரும்பாலான மக்கள் சிறுசிறு கொட்டில்களில் வசிக்கின்றனர். ஆடைகள் இல்லை; ஒருசில ஆடைகளையே திரும்பத் திரும்பத் தோய்த்துத் தமது மானத்தைக் காப்பாற்றுகின்றனர். வேட்டையாடத் தடை, மீன் பிடிக்கத் தடை, விவசாயம் செய்ய இடமில்லை. கூனிக் குறுகி வாழ்க்கையின் அர்த்தத்தையே மறந்து விட்டார்கள். இன்பம் என்ற சொல்லைக் கேட்டதுண்டு அது என்றாவது எங்கள் வீட்டுப் பக்கம் வந்ததுண்டோ? என்ற பட்டுக்கோட்டையாரின் வரிகளே நமது ஞாபகத்துக்கு வருகின்றன.

இந்த நிலையிலே யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் என்ன செய்ய முடியும்? அரசாங்கத்துக்குத் திரும்பத் திரும்பச் சொல்லியும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. கடவுளிடம் முறையிடுவதே ஒரே வழி என்ற நோக்கத்தோடு யாழ். பெரிய கோயிலில் மக்கள் கூடினார்கள். அனைத்து கிறிஸ்தவ மக்களும் கடவுளை நோக்கிப் பிரார்த்தனை செய்தனர். அங்கு ஒரு மகஜரைத் தயாரித்து ஜனாதிபதிக்கு அனுப்புவதென்று முடிவு செய்தார்கள்.

ஏதோ நம்மால் இயன்றதை நாம் செய்ய வேண்டும். வன்னி வாழ் மக்கள் தாம் செய்யாத தவறுகளுக்காகத் தண்டிக்கப்படுகின்றனர். இதனை உலகத்தாருக்குச் சொல்வதற்கும் நம்மால் முடியாதிருக்கின்றது. இறைவனை வழிபடுவோம். ''தமிழா, கடவுளை நம்பு! உனக்கு நல்ல காலம் வருகின்றது'' என்ற மகாகவி பாரதியின் வசனங்களை நினைவு கூர்ந்து வன்னி மக்களை நமது ஜெபங்களில் நினைவுப் போமாக! ★

## பட்டுக்கோட்டைக் கவிஞர் பாடிய நிலையில் வன்னி மக்கள்

- ● தமிழ் மக்களின் முன்னிலையிலே தமிழிலே பேச வேண்டும் என்ற ஆசை தனக்கு இருப்பதாகச் சமீபத்தில் ஜனாதிபதி கூறினார்.
- ★ **தேர்தல் விரைவாக நடக்கப் போகின்றதென்பது தெளிவாகத் தெரிகின்றது! இல்லாத பொல்லாத ஆசைகள் தங்களிடம் இருப்பதாகத் தலைவர்கள் சொல்லிக்கொள்வது இப்படியான ஒரு காலகட்டத்திலே தான்!**
- ● உட்கட்சிப் பிளவுகள், கூட்டணிக் கட்சிகளுக்கிடையே கருத்து மோதல்கள், முரண்பாடுகள் என இந்திய அரசியல் அரங்கு ஒரே குழப்ப நிலையிலேயே இருக்கின்றது!
- ★ **இந்தப் பெரிய இந்தியாவிலுள்ள தலைவர்கள் கூட, எங்களைத்தானே தங்கள் 'முன்னோடி' களாகக் கொள்கின்றார்கள் என இங்குள்ள தமிழ்க்கட்சிகள் பெருமைப்படக் கூடும்!**
- ● வவுனியா நகரில் திடீரென்று பொருள்களின் விலை உயர்ந்து விட்டது
- ★ **வன்னி மக்களுக்கான 'போக்கு வரவு' ப் பாதை திறந்தவுடன் வர்த்தகர்களுக்கான 'வரவு'ப்பாதையும் திறந்துவிட்டதோ?**
- ● துப்பாக்கி முனையில், எம்மைப் பேச்சு வார்த்தைக்கு நிர்ப்பந்திக்க முடியாது என இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தான் பிரதமருக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்!
- ★ **அதாவது, 'சமாதானத்துக்கான போர்' என்ற அர்த்தமற்ற ஆடம்பர அறிவிப்பை அவர் முழுமையாகவே நிராகரிக்கிறார் என்பதாகும்.**
- ● ஜெயலலிதா கலந்துகொள்ளும் தேர் தல் பிரசாரக் கூட்டங்களுக்கு அதிக அளவில் மக்கள் வருகின்றனர்!

**எதிரொலி...**
-இடியன்-

- ★ **கோமாளிகளைப் பார்ப்பதற்கும் கூட்டம் கூடும்; தலைவர்களைக் கேட்பதற்கும் கூட்டம் கூடும்; இது எந்த ரகமோ?**
- ● பாகிஸ்தானுக்குப் பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என அமெரிக்கப் பிரஜைகளை அந்த நாட்டு அரசு கேட்டுள்ளது.
- ★ **'பயம் வேண்டாம்' எனச் சொல்ல வேண்டிய இந்தச் சர்வதேசப் பொலீஸ், 'பயணம் வேண்டாம்' எனச் சொல்வது காலத்தின் கோலமோ?**
- ● புலிகள், படையினர் மிக அருகருகே நின்று துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.
- ★ **ஒருவரை ஒருவர் 'துப்புரவா' க்கும் துர்ப்பாக்கியம் ஏற்படாமலிருக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றார் சமாதானப் பிரியர் ஒருவர்!**
- ● இரண்டாவது தடவையாக, மிகப் பரந்த அளவில் அறிவித்தல்கள், பிரசாரங்கள் இடம்பெற்ற போதிலும், இராணுவத்திற் சேர்வதற்கு எந்தத் தமிழ் இளைஞனும் முன்வர வில்லையாம்!
- ★ **தற்கொலைக்கும் தற்கொடைக்குமிடையேயுள்ள சாதக, பாதக அம்சங்களைப் பரிசீலித்துக்கொண்டிருப்பதுதான் காரணமோ?**
- ● கண்ணி வெடிகளைக் கண்டுபிடிப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட மோப்ப நாய்கள். உரிய காலத்துக்கு முன்னரேயே, இப்பிரதேசச் சூழலுக்குப் பழக்கப்பட்டுவிட்டன.
- ★ **''நாய்கள் மட்டுமல்ல நாங்களுந்தான்'' எனக் கூறுகின்றனர் பனங் கள்ளில் நீந்தியெழும்பும் வேற்றுடையினர் சிலர்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாண்டிக்குளம் முதல் மாங்குளம் வரை...

[ஏழாம் பக்கத் தொடர்]

பக்கமும் தொடராக முட்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து 80 மீற்றர் தூரத்தில் — ஒருவரது முகத்தை அடையாளம் காணக்கூடியளவு கிட்டத்தில் புலிகளின் எல்லை அமைந்திருக்கிறது. திறக்கப்படப் போகும் பாதைக்கு அருகில் ஓரிடத்தில் காடுகள் அழிக்கப்பட்டு கட்டாந்தரையாக்கப் பட்டுக்கொண்டிருந்தது. அதில்தான் வவுனியாவிலிருந்து வரும் பஸ்கள் தரித்து நிற்குமாம். அந்த இடத்துக்கு நாம் போய்ச் சேரும்போது 9–00 மணி. போகும்போது எம்மை பொறுப்பாக அழைத்துச்சென்ற கப்டன் திலக்கிடம் ''செய்தியாளர்களாகிய நாம் அந்தப் பக்கம் போய்ப் புலிகளைச் சந்திக்க அனுமதி கிடைக்குமா?'' என்று கேட்டோம்.

''இராணுவ தரப்பில் எந்த ஆட்சேபனையும் இல்லை; எங்கு வேண்டுமென்றாலும் செல்லுங்கள்; ஆனால் திரும்பிப்போகும்போது என்னுடன் வந்து விடுங்கள். நான் எனது உயரதிகாரிகளுக்கு உங்களைக் கணக்குக் கொடுக்க வேண்டும்'' என்றார். இதனை நாம் மாங்குளம் சென்றதும் அவரிடம் நினைவு படுத்தினோம். அவர் மாங்குளம் பகுதியில் இருந்த உயரதிகாரி ஒருவரின் கவனத்துக்கு எமது கோரிக்கையைக் கொண்டுவந்தார். அந்த அதிகாரியோ அதுபற்றி நாம் பொறுப்பு நிற்க முடியாதென்றும் செஞ்சிலுவைச் சங்கத்துடன் கதைக்கும்படியும் கூறிவிட்டார்.

உடனே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி ஒருவரைப் பிடித்து எமது ஆசையைக் கொட்டினோம். எடுத்த எடுப்பிலேயே அவர் ''அது முடியாது; இராணுவத்தினரிடம் கேளுங்கள்'' என்றார். அவரைக் கூட்டிச் சென்று இராணுவ அதிகாரியின் முன் நிறுத்தினோம். அவர்கள் ஒருவரை ஒருவர் மாறி மாறிச் சாட்டிக்கொண்டிருந்தனர். பின்னர் அந்தப் பக்கம் கதைத்துவிட்டுச் சொல்வதாகச் செஞ்சிலுவைப் பிரதிநிதி கூறிவிட்டுத் தமது லாண்ட் குறூஸர் வாகனத்திலேறி அந்தப்பக்கம் பறந்தார். ஒரு மணி நேரத்தின் பின் வந்த அவர் இராணுவத்தின் முன்னணிப் பகுதிக்கு முன்னால் எவரும் செல்ல அனுமதி இல்லையென்றும்—

ஆனால் செய்தியாளர்கள் மட்டும் அதிலும் கமெரா வைத்திருப்போர் மட்டும் கொஞ்சம் அதாவது சுமார் 10 மீற்றர் அளவு தூரத்துக்குச் செல்லலாம்—அதேபோல் அந்தப் பகுதியிலும் புலிகளின் முன்னணி அரணுக்கு முன்னால் எவரும் வரமுடியாது. ஆனால் அங்குள்ள செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்கள் மட்டும் சொற்ப தூரம் முன்னே வரலாம். இந்தநிலையில்முன்னேறிய செய்தியாளர்களுக்கும் புலிகள் தரப்பிலிருந்துமுன்னேவந்த செய்தியாளர்களுக்குமிடையில் சுமார் 50 மீற்றர் இடைவெளி இருக்கும். எனவே அந்தப் பக்கத்தில் இருப்பவர்களுடன் நீங்கள் எவரும் கதைக்கக் கூடாது — அவர்கள் கதைத்தால் பதில் சொல்லவும் கூடாதென எமக்குக் கண்டிப்பாகக் கூறினார்.

இந்த நிபந்தனையின் பின் நாம் அனைவரும் முன்னே அழைத்துச் செல்லப்பட்டோம். தமது எல்லையுடன் இராணுவத்தினரும் அரசாங்க அதிபரும் நின்றுகொள்ள—நாம் கொஞ்சம் முன்னே கூட்டிச் செல்லப்பட்டு நிறுத்தப்பட்டோம்.

எமக்குச் சற்றுத் தூரத்தில் புலிகளின் குரல் செய்தியாளர் மற்றும் புலிகளின் ஆண்—பெண் போராளிகள் வீடியோ மற்றும் புகைப்படக் கமெராக்களுடன் நின்றனர். ஆனால் அவர்களுடன் நாம் பேசிவிடாதபடி ஒரு செஞ்சிலுவைப் பிரதிநிதி காவலுக்கு நின்றுகொண்டார்.

ஏற்கனவே யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது எம்முடன் சேர்ந்து செய்தி சேகரித்தவர்கள், படம் பிடித்தவர்கள், வீடியோ எடுத்தவர்களெல்லாம் எமக்குமுன்னால்நிற்க— எம்மால் பேசமுடியாத நிலை.

ஆயினும் பல வருடங்களின் பின் கண்ட சந்தோஷத்தில் எப்படி என்றும் பரவாயில்லை என்றும் பரஸ்பரம் கண்களாலேயே பேசிக்கொண்டோம்.

புலிகளின் முன்னணி காவலரணில் அவர்களின் அரசியல் துறை துணைத் தலைவர் கரிகாலன் நின்று கொண்டிருப்பதும் அருகில் மாங்குளம் தளபதி லெப்டினன்ட் கேணல் ஜெயம், றோபேட் நிற்பதும் தெரிந்தது. கரிகாலனுக்கு செய்தியாளர்கள் கை காட்டவே அவர் பார்த்துச் சிரித்தார்.

அப்போது வவுனியாவிலிருந்து மக்களை ஏற்றிக் கொண்டு பஸ் வருவதாகச் சொல்லப்பட்டது. அந்த இடத்திற்கு விரைந்தோம். 10 பஸ்களில் 412 பேர் அழைத்து வரப்பட்டிருந்தனர். அவர்களது உடைமைகள்மட்டும் 3 லொறிகளில் எடுத்து வரப்பட்டிருந்தன. அந்தஉடைமைகள் மக்களால் தூக்கிச் செல்ல முடியாதளவிற்கு அதிகமாக இருந்ததால் பொருள்களை ஏற்றி வந்த லொறிகளைத் தாம் பொறுப்பேற்று புலிகளின் பகுதிக்குள் எடுத்துச் சென்று பொருள்களை இறக்கிவிட்டு திருப்பிக் கொண்டுவந்து தருவதாகச் செஞ்சிலுவை பிரதிநிதி இராணுவத்திடம் கேட்டார். அதற்கு இராணுவத்தினர் மறுத்துவிட்டனர். புலிகளின் பகுதிக்குள் செல்லும் லொறியில் குண்டு ஏதாவது வைத்து அனுப்பினாலும் அது பாதுகாப்புப் பிரச்சினையாகிவிடும். எனவே இராணுவத்தின் முன்னணி எல்லையில் லொறியைக்கொண்டு சென்று பொருள்களை இறக்கிவிடச் சொன்னார். அவ்வாறே அதன்படி பொருள்கள் இறக்கப்பட்டன, தொடர்ந்து பஸ்ஸிலிருந்து மக்கள் ஒவ்வொருவராகஇறக்கப்பட்டு வரிசைக் கிரமமாகஅனுப்பப்பட்டனர். அவர்களிடம் கையிலே அகப்படும் பொருள்களை எடுத்துச் சென்று புலிகளின் பகுதிக்குள் செல்லுங்கள். அங்கு வைத்து உங்கள் உங்களது பொருள்களை அடையாளம் கண்டு எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறப்பட்டது, ஏனென்றால் இவ்வளவுபிடுங்குப்பாடுகளின் பின் மக்களை அனுப்பும் போதே நேரம் 2.00மணிஆகிவிட்டது. அதன் பின் 10 லொறிகளை உள்ளே எடுத்து பொருள்களை மாற்றி ஏற்றி அனுப்ப வேண்டிய கடமை வேறு இருக்கிறது என்ற நிலையில் மக்களை அனுப்பும் பணி துரிதப்படுத்தப்பட்டது. ஆனால்மக்களோ கேட்பதாக இல்லை.

ஒரு பஸ்ஸில் வந்த ஆள்களை அனுப்பவே பல மணி நேரம் பிடித்தது. அதிலும் ஒரு கையிலே கைக் குழந்தை, மறுகையிலே தேங்காய் எண்ணெய், மண்எண்ணெய் அடங்கிய 4 லீற்றர் பிளாஸ்ரிக் கலன்கள், தலையிலே ஓர் உரப்பை என்பவற்றைச் சுமக்க முடியாமல் சுமந்துகொண்டு ஒரு பெண் உதிரியாக இன்னொரு பையை என்ன செய்வதென்று தெரியாமல்வருவோர்போவோரை எல்லாம் தூக்கிவந்து தரும்படி கெஞ்சிக் கொண்டிருக்க அவர்கள் தமது பொருள்களையே தூக்க முடியாத நிலையில் அந்தப் பெண்ணை உதாசீனம் செய்துவிட்டுச் செல்ல— பார்க்கும்போது பரிதாபமாக இருந்தது. இந்தக் கைக்குழந்தையுடன் இவ்வளவு பொருள்களை எடுத்துச் செல்ல வேண்டுமா? என்று கேட்டோம்.

''இதெல்லாம் குழந்தைக்குத் தேவையான பால்மா, மருந்து, சவர்க்காரம் என்பனதான். திருப்பியும் பாதை எப்போது மூடப்படுமோ தெரியாது.அதனால்தான் தொகையாக வாங்கிக் கொண்டு செல்கிறேன்'' என்றார். அவர் தரப்பு நியாயம் சரியானதென்றே தோன்றியது. அந்தப் பெண்ணின் பரிதாப நிலையைப் பார்த்து ஓர் இராணுவச் சிப்பாய் அந்தப் பொதிளைகதமது எல்லை வரை தூக்கிச் சென்று கொடுக்க இடையில் மனித நடமாட்டமில்லாத பகுதியில் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தூக்கிச் சென்று கொடுக்க — அந்தப் பக்கத்தில் அதனை வாங்கிக் கொண்டு புலிப்போராளிகள் கொண்டு சென்று கொடுத்த காட்சி மனதைத் தொட்டது.

தொடர்ந்து எமக்கு ஒதுக்கப்பட்ட முன்னணிப் பகுதிக்குச் சென்றோம். செஞ்சிலுவைப்பிரதிநிதி கொஞ்சம் அயர்ந்த நேரமாகப் பார்த்து மெதுவாக அந்தப் பக்கம் பேச்சுக் கொடுத்துப் பார்த்தோம். இந்தப்பகுதியில் உள்ள எங்களை நாம் அறிமுகம் செய்துகொள்ள — அந்தப் பகுதியிலிருந்தவர்கள் தம்மை அறிமுகப் படுத்திக் கொள்ள என்று உரையாடல் தொடர்ந்தபோது எம்மைக் கவனித்து விட்ட செஞ்சிலுவைப் பிரதிநிதி அந்தப் பக்கம் உள்ளவர்களுடன் கதைக்க வேண்டாம். மீறிக் கதைத்தால் செய்தியாளர்கள் அனைவரும் வெளியேற்றப் படுவீர்களென்றார் கடுமையாக. அப்போது இந்தப் பாதை திறப்பிற்குப் பெரும் முயற்சி எடுத்த வவுனியா அரச அதிபர் அங்கே வந்து புலிகளின் பக்கம் போய் பேசி விட்டுவர முயற்சித்த போது அவரும் திருப்பி அனுப்பப்பட்டார். வவுனியா அரச அதிபர் மட்டுமன்றி கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களின் இணைப்பாளருமாகிய அவருக்கே அனுமதி மறுக்கப்பட்டது ஆச்சரியமாக இருந்தது.

ஆயினும் எமது முயற்சி ஓய்வதாக இல்லை. அங்கேயும் இங்கேயும் பார்த்துவிட்டு அடிக்கடி ரகசியமாகக் கதைத்துக் கொண்டோம். வன்னியின் நிலைமை பற்றி, பாதை திறப்புப் பற்றி, சமாதானத் தீர்வு பற்றியெல்லாம் பேசிக் கொண்டோம்.

இடையில் மதிய உணவுக்கு அழைக்கப்பட்ட போதும் வந்து சாப்பிட்டுவிட்டு செய்தியாளர்கள் அனைவரும் திரும்ப ஓடிச்சென்று அந்த எல்லையில் நின்று கொண்டனர். ஏதோ செய்தி சேகரிக்கும் ஆவல் போலும் என்று நினைத்திருந்த எமக்கு பாதை திறப்பு நிகழ்ச்சிகள் அனைத்தும் முடிந்து நாம் வவுனியாவிற்கு திரும்பிச் செல்லத் தயாரான போது எம்முடன் இருந்த பி.பி.சியின் சிங்களச் சேவைச்செய்தியாளர் ஜினசேன ரத்துகமகே ''திரும்பிப் போகவே மனமில்லாமல் இருக்கு'' என்றார்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக. 15

வலிகாமம் கல்வி வலயத்தின் பிரிவு இரண்டு பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான சிறுவர் உரிமைகள் தொடர்பான — கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது வந்து கலந்து கொள்ளும்படி வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் வீ. இராசையா கேட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவிருந்த இக்கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. (உ–7)

## மக்கள் முகம்



ஆஸ்திரேலியாவில் விக்டோரியா நகரில் இயங்கும் இலங்கைத் தமிழ்ச் சங்கம் கடந்த வருட இறுதியில் நடத்திய அனைத்துலகக் கவிதைப் போட்டியில் மூத்த கவிஞர் நயினை நா. க. சண்முகநாதபிள்ளைக்கு முதற்பரிசு கிடைத்துள்ளது.

''கொழும்பில் தமிழன் படுகின்ற கோலம்'' என்னும் தலைப்பில் இவர் எழுதிய கவிதைக்கு இலங்கை நாணயத்தில் 6500 ரூபா பரிசுத்தொகையும் அண்மையில் தபால் மூலம் கிடைத்துள்ளது.

நயினைக் கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை சஞ்சீவியிலும் உதயனிலும் அவற்றின் ஆரம்ப காலம் தொட்டே பல கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். நீண்ட காலம் ஆசிரியர் சேவையில் பணியாற்றிய இவர் யாழ். மத்திய கல்லூரியின் அதிபராக இருந்து ஓய்வு பெற்றுள்ளார். (அ)

★ ★ ★

அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டியில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவி செல்வி தி. யசோதா ஈட்டி எறிதலில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவரைப் பாடசாலைச் சமூகத்தினர் பாராட்டி வாழ்த்தியுள்ளனர். (ஐ–க)

★ ★ ★

வடபிராந்தியப் போக்குவரத்துச்சபையின் முதுநிலை வீதிப் பரிசோதகர் நாகலிங்கம் புவனசுந்தரம் தமது30 வருட சேவையினைப் பூர்த்தி செய்து தமது 60 ஆவது வயதில் 9– 8– 99 இல் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் அண்ணாவியார் நாகலிங்கம் கலைப்பள்ளி இயக்குநரும், வட்டுக்கோட்டை முத்தமிழ் மன்ற வெளியீட்டு அமைப்பின் தலைவரும் வட்டு இலக்கிய மன்றப் பொருளாளருமாவார். (ஐ-க)

★ ★ ★

யாழ். செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ. ஆறுமுகராசா திருநெல்வேலியில் உள்ள மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் கடந்த 3 ஆம் திகதி தொடக்கம் பதவி ஏற்றுள்ளார்.

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் இந்த நியமனம் ஒருவருட காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

கால்நடை வைத்தியர் எஸ். வசீகரன், உதவி விவசாயப் பணிப்பாளர் த. சிவலோகநாதன் ஆகியோர் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். [ஐ–17]

★ ★ ★

யாழ். மத்திய கல்லூரி உபஅதிபராகக் கடமையாற்றிய திரு. கபிரியேல்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை யாழ். நாவாந்துறை றோ. க. பாடசாலை அதிபராக அண்மையில் பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [ஐ–30]

★ ★ ★

இம்முறை நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் தேசிய மட்டத்தில் நடைபெற்ற பிரிவு நான்கிற்கான கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம்பெற்ற வயாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவன் த. பிரகாஸைப்பாராட்டி மேற்படி வித்தியாலய பழையமாணவர் சங்கம் தங்கப்பதக்கம் வழங்கிக்கௌரவித்துள்ளது.

அதிபர் ஆ. சி. நடராசா தலைமையில் பழையமாணவர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழாவுடன் பாடசாலையின் சாரணர் வழிகாட்டிகள் பெற்றோரை மாலையிட்டு வழிபடும் நிகழ்வும் இடம்பெற்றது. சாரணர்களுக்கான சின்னம் சூட்டுதலும் நடைபெற்றது.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம்போல் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு த. பிரகாஸுக்கு தங்கப்பதக்கத்தைச்சூட்டினார்.

வலிகாமம் கல்விவலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பிரகாஸுக்கு பழைய மாணவர் சங்கம் வழங்கிய தங்கப்பதக்கத்தை அணிவித்தார். [ஐ–152]

## கூட்டுறவாளரின்...

(6 ஆம் பக்கத் தொடர்)

ஆராயப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பெரியார்களின் சேவைகள், பொது அபிவிருத்திகள், கல்வி மேம்பாடு என்பவை விருத்தி பெற கூட்டுறவே காரணம் என ஆசிரியர் விளக்கி கூட்டுறவு பற்றிய விரிவான தகவல்களை தந்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுத் துறையினரின் வரலாற்றைப் பூரணமாக அறிவதற்கு ஆதாரபூர்வமாக எந்தவொரு நூலும் இதுவரை பூரணமாக வெளிவரவில்லை. யாழ்மாவட்ட கூட்டுறவுத் துறையை ஆய்வு செய்பவர்களுக்கும் கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்கி வழி நடத்துவதற்கு துடிக்கும் கூட்டுறவாளர்களுக்கும் இந்நூல் பெரிதும்பயன்படும்.

கூட்டுறவுத் துறையில் முன்னின்று உழைத்தவர்கள், புதிதாக அமைக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புக்களின் சேவைகள் அதில் தான் பங்கு கொண்டு உழைத்த அனுபவங்களையும் எதிர்நோக்கிய பிரச்சினைகளையும் வெற்றிகரமாக முன்னெடுத்த தீர்வுகளையும் நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நான்கு மாடிகள் கொண்ட சிறந்த கட்டடம் அமைக்கப்பட்டு இலங்கையின் கூட்டுறவின் தந்தை எனப் போற்றப்படும் வி. வீரசிங்கம் அவர்களின் பெயருடன் 1968 — 11 — 27 இல் திறக்கப்பட்டமை மற்றும் 1952 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டமை மற்றும் கூட்டுறவு அச்சகம் உருவாக்கப்பட்டமை மேலும் கூட்டுறவு தொடர்பான மிகப் பல தகவல்களை இந்நூல் கொண்டுள்ளது.

முக்கியமாகக் கூட்டுறவாளர்களும், பொதுமக்களும் வாசித்து அறியவேண்டிய முக்கிய நூலாக இது திகழ்கின்றது. நூலாசிரியரின் அர்ப்பணிப்பான சேவைமூலம் இந்நூல் சிறப்பாக வெளிவந்துள்ளது. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

சாவகச்சேரி

ரீ. பரமேஸ்வரி (096838ஏ), ஆர். தங்கராசா (096838 பீ), ஈ. தங்கராசா (096888 சீ), பீ. நவநிதன் (098416 ஏ), ரீ. மரியறவேல் (099051 ஏ), ரீ. செபமாலையம்மா (099051பீ), ஈ. செல்வதுரை (101569ஏ), எஸ். உமாதேவி (101569பீ), பீ. தியாகராஜா (101580ஏ), என். யோகாதரன் (103745ஏ),

வீ. டேவிட் ரத்தினநாதன் (103828ஏ), டாக்டர். திருமலர் (103828பீ), ஆர். தம்பையா (103829ஏ), என். வளன் (103831ஏ), சீ. பானுஜா (103831பீ), பீ. ராஜீ (103835ஏ), ஏ. பிரதாப் (103835பீ), ஏ.|லைலா (103835சீ), கே. பாக்கியவதி (103867ஏ), கே செந்தில்நாதன் (103867பீ), வீ. வைத்தியலிங்கம் (103878ஏ)

எட். செல்வராணி [103895 ஏ], எம். மகிப்பிரியா [103895பீ], எம், சுர்வணபிரியா [103895சீ], எம். துஷிதப்பிரியா [103895டீ], என். சிவகுமார் [103807ஏ] எம். ஏ. மரியபொன்கலன் [103911ஏ], சீ. மனோகரன் [103918ஏ], எல். மனோகரன் [103918பீ[, கே. சிவரூபன் [103920ஏ], கே. ராசம்மா [103920பீ], எஸ். பாலசுந்தரம் [103922ஏ], ரீ. கமலநாயகி [103931ஏ],

ஆர்.சிறீமதன் (103931பீ), வீ.சின்னத்தம்பி(105531ஏ), வீ. கலாநிதி (105531பீ), வீ. கமலினி (105531சீ), ரீ.ரமேஸ்வரன் (105534ஏ), திருநாவற்கரசு (105534பீ). எஸ். பொன்னுத்துரை (105536ஏ),எஸ்.பொன்னுத்துரை (105536பீ), ஜி.றதினி (105555பீ), ஜி. பிரஷாந்தி (105555சீ), என். ஞானசேகரம் (105555டீ), கே. தம்பிராஜா (105561 ஏ.)

ரீ.குணமணி (105561பீ), எஸ்.சுப்ரமணியம் (105563 ஏ), கே. நாகரத்தினம்(105568 ஏ), பீ.பத்மநாதன் (105571 ஏ),கே.சிவானந்தன்(105575 ஏ), ஏ.சிவானந்தன்(105575 பீ).என்.சிவாநந்தன்(105575 சீ), வீ.நாகேஸ்வரி(105581 ஏ), வீ.நாகராஜா (105581 பீ), துரைராசா (105584 ஏ), எஸ்.ஸ்ரீநிவாசன்(105591 ஏ).

ஆர். புஸ்பராணி [105594 ஏ], வை. சிவமதி [105595 பீ], எஸ். சிவஜீவன் [105595 சீ], வை, திகரன் [105595 டீ], எஸ். சுப்பிரமணியம் [105595ஈ], ஜி.ஈ. நிவேதனா [105597 ஏ], கே. தினேஷ் [105602 ஏ], எஸ், கந்தையா [105602 பீ], சத்தியமதி [105603ஏ], எஸ். சுசிலா (105603 பீ], எஸ். சசிகலா [105603 சீ].

எஸ். சசிரேகா[105603பீ], கே.சங்கரலிங்கம் [105608ஏ], எஸ்.நாகேஸ்வரி [105608பீ], எஸ். ஜனார்த்தன் [105608 சீ], ரீ.அன்னலக்சுமி [105608 பீ], ஆர். கிரிஜாதேவி [105612 சீ], எம். ராஜதுரை [105612டீ],எஸ். லதாங்கேஷ் [105621 ஏ], எஸ். கிரிஜேவ் [105621 பீ], எஸ். சிதம்பரநாதன் [105626 ஏ], எஸ். கணேசமூர்த்தி [105630 சீ],

பீ. பவானந்தன் (105634 ஏ), எஸ். யோகேஸ்வரி (105636 ஏ), எஸ்.சந்திரன் (105636 பீ), எஸ். சிந்துஜா (105636 சீ). எஸ். சாதப்பிள்ளை (105636 டீ). எஸ். வரதராஜா (105636 ஈ), ஏ. எஸ். அழகம்மா (105638 ஏ),என்.நாகலிங்கம் (105638 பீ), வீ. இராகையா (105644 ஏ), எஸ்.கந்தையா(105647 ஏ). கே. லலிதா (105647பீ), எம்.முத்துமலர் (105648 ஏ).

எஸ் சிறீகரன் [105654 ஏ], எஸ். ராசையா [105660 ஏ], ஆர். விக்னேஸ்வரி [105660 பீ], வீ: சோமசுந்தரம் [105661 ஏ], எஸ்.சோமசுந்தரம் [105661 பீ], எம். முருகதாசன் [105665 ஏ/, என். வைத்திலிங்கம்[105656 பீ]. ஏ, அன்னப்பிள்ளை [105669 ஏ], எஸ். தங்கரத்தினம் [105672 ஏ], எஸ். சதாசிவம் [105672 பீ], ஐ. குமாரலிங்கம் [105673 ஏ], கே.நகுலேஸ்வரி [105673பீ),

கே. வகோஜன்(105673சீ), கே. தவதாசன் (105674 ஏ), பீ.சண்முகவிநாயகர்(105575 ஏ), பீ. சண்முகநாதன் (105677 ஏ), ஜ. சண்முகநாதன் (105677 ஏ), எஸ். சரவணமுத்து (105683 ஏ), பீ. ராஜேந்திரம்(185684ஏ), என். தவராசா (105686ஏ), கே. தவராசா [105686 பீ], பூ ரத்னகிளி [105689 ஏ], பீ. ரஜீகன் [105689பீ), எம். செல்லம்மா (105693 ஏ],

கே. பொனி (105694 ஏ).

வை. மயில்வாகனம் (105699 ஏ), ரீ. கணேசு (105704 ஏ), ஜி. அருணந்தி (105712 ஏ). கே. சின்னதுரை (905714 ஏ), எஸ். வசந்தரூபி (105714 பீ), வீ. உரயகுமாரி(105721ஏ), கே, நல்லையா (105722 ஏ), என். சலாம் (196722 பீ), கே. கனகரத்தினம் (105725 ஏ), வீ. நாகராஜா (108406 ஏ), கே. விளன் (108408ஏ).

ஜே காந்திராசி (108408 பீ), கே. முகுந்தன் (108411 ஏ), எம். வசந்தரூபன் (108411 பீ), கே. தவமலர் (108412 ஏ), கே. கோகிலதாஸ், (108412 பீ), செல்லதுரை (108420 ஏ), வீ. கந்தன் (108422 ஏ), எஸ். கந்தன் (108422 பீ), ஆர், கனகேஸ்வன் 108322 சீ), எஸ். வரிதம்பி (108423 ஏ), வீ. சேகராஜா (108423 பீ), பீ. மரியதிரேசா (108425 ஏ).

ஜி. லீலிமலர் (108426 ஏ), எஸ். சுந்தரலிங்கம் (108427 ஏ), எஸ். வசந்தகுமாரி (108427 பீ), எஸ். சுதர்சிங் (108427 சீ),எஸ். மகேந்திரராசா 108428 ஏ), எம். கருணாகரன் (108428 பீ), சீ. மலர்மணி (104830 ஏ), ஆர்.வீ.செல்லையா (104830 பீ), ரீ மகேஸ்வரி (104830 சீ), ஜி பிரேமாவதி(108440 ஏ), ஆர். மகேஸ்வரன் (108441 ஏ)

எஸ். ராஜினி (108444 ஏ), சி. கிரியா (108444பீ), எஸ். சுத் (108444சீ), கே. நடராசா (108445ஏ), எம், வள்ளியம்மை (108447ஏ). ஆர். நாகேந்திரன் (108448 ஏ), என். ரஜனி (108448 பீ), என். ரஜனி (108448 சீ), எல். நாகேந்திரன் (108448டீ), வீ. குலராசசிங்கம் (108449ஏ), கே. உதயபாலன் (108449பீ).

வீ. கயிலாயபதி (108453 ஏ), கே. குணசுதன்(108453 பீ), கே. சுதாகரம் (108453 சீ), கே. யாழினி (108453 டீ),எஸ் ராயேஸ்வரி(108455 ஏ), எஸ். சோதிரட்ண சர்மா (108457ஏ), என். லாகினி (108457பீ), எஸ். ஆரபி (108457சீ), எஸ். அப்புதம்பி (108457டீ).எஸ் வைஷ்ணவி (108457ஈ), வீ. ரமணாதன் (108467ஏ).

கே. வீரசிங்கம்[108476ஏ], ஆர் பாலசந்திரன் [108484 ஏ],பீ. தவமணி [108484பீ], ரீ. வடிவேலு [108486ஏ]. ஆர். நவரத்தினராசா [108506பீ], ஐ. நவரத்தினராசா[108506பீ], எம் ஏ மரியபேணாட் [108509ஏ], எம். ஜே மரியபேணாட் [108509பீ], எஸ் நவராஜா [108512ஏ], எஸ். சந்ரகுமாரன்[108515ஏ], சீ. கிரிசா [108515பீ], எஸ். மல்லிகாதேவி[108517ஏ].

எஸ். சுபாஜினி (108517 பீ), கே சின்னதுரை (108520 ஏ), ஜி கமலேஸ்வரி (108525ஏ). ஜி. டினேஷ் (108525 பீ), ஜி. பிரதீப் (103525 சீ), ஜி. கோமலின் (103525 டீ), எஸ். செல்வராசா(108528ஏ)' எஸ். கமலாதேவி (108528 பீ), தர்ஷகா (108528சீ), எஸ். கயவதனி (108528 டீ) வீ. சின்னராசா (108529 ஏ).

எஸ். சுமந்திரம்[108529பீ), எஸ். சுமங்கலி [108529 சீ], வீ. ஏ.கிறிஸ்ரோபர் [108532 ஏ], ரீ. பரமேஸ்வரி [108535 ஏ], ரீ. தர்மலிங்கம் [108535 பீ].எஸ்.குமாரசாமி[108538 ஏ], எம். பாலகௌரி [108538 பீ], ஆர். சிவராஜா [108546ஏ],எஸ். தங்கராணி [108547 ஏ], எஸ். அஸ்வினி [108547பீ], எஸ். நிரஞ்சலி [108547 சீ].

விஜயலட்சுமி (108549ஏ), கே. சங்கரப்பிள்ளை(108556 ஏ), பீ. சங்கரப்பிள்ளை (108556பீ), ஐ. சரஸ்வதி (108557ஏ), கே. பவளம் (108559ஏ),கே. ராஜேந்திரன் (108562ஏ), கே. கனகநாதன் (108562பீ). வீ. புவனேஸ்வரி (108564ஏ), ஏ. ஜெயசீலன்(108567 ஏ), எஸ். சிவயோகம் 108568ஏ), எஸ். தவராஜா 108569ஏ). எஸ். கதிர்வேல் (108571ஏ),

ரீ. சுசிலாதேவி (108574 ஏ), ரீ. நந்தீவன்(108574பீ), ஜி அன்னம்மா [108575ஏ], இ. ஞானசௌத்ரி [108577 பீ]. ஜி ரோகினி [108575 சீ]. வீ கந்தையா [108575 ஏ], கே. மனோரஞ்சிதம் [108577 பீ], எம். கனகலிங்கம் [108583 ஏ],கே. கே. சிவயோகம் [108591ஏ),ஜே. கௌசிகன்[108591 பீ]. வீ. தெய்வநாயகி [108601ஏ], வீ மதுமதி [108601பீ[.

கே. அரசநாதன் [108603 ஏ], வீ.சின்னத்தம்பி(110516 ஏ). எஸ். தவராணி[110516 பீ], எஸ். தேவயோகன் (110516 சி), எஸ். மகேஸ்வரி (110516 டீ , பீ. நவரட்ணம்(11057 ஏ),என் கோமதி அம்மா [11057 பீ], எஸ். விசாலாட்சி (11057 சீ], யீ, சுந்தரம்பிள்ளை[110570ஏ]. அன்னலிங்கம் [110654 ஏ], பீ. உதயகுமாரி (093198ஏ],

(தொடரும்)

## சுயதொழில் முயற்சிக்கு கடன் உதவி

நெடுந்தீவு, ஓக. 15

நெடுந்தீவு பல நோ.கூ.சங்கம் தனது உறுப்பினர்களுக்கு சுயதொழில் முயற்சிக்கென கடனுதவிகளை வழங்கவுள்ளது.

கடன்பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்கள் அரசாங்க ஊழியரின் பிணையைப் பெற வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

(3-111)

## 5 ஆம் ஆண்டின் நீங்காத நினைவலைகள்



அன்னை மடியில் 05 – 01 – 1968

ஐங்கரன் பாதம் 10 – 08 – 1994

செல்வன்

**தம்பிஐயா ரவிச்சந்திரன்** (ராசன்)

திதி: 15 - 08 - 1999

ஆண்டு ஐந்து சென்றாலும்
ஆடிச் சதுர்த்தி என்றால்
ஆறாது எம் செல்வமே.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.

''நவேந்திரகிரி''
இணுவில் மேற்கு,
இணுவில்.

(67864)

## டிரக் சாரதிக்கு தண்டனை

யாழ்ப்பாணம், ஓக. 15

இராணுவ டிரக் ஒன்று மோதியதால் உயிரிழந்த இளைஞர் ஒருவரின் மரணம் தொடர்பான வழக்கில் அந்த டிரக் சாரதிக்கு ஆறு மாத கால ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை யாழ். நீதிமன்றத்தால் விதிக்கப் பட்டது.

அத்துடன் அவரது சாரதி அனுமதிப் பத்திரத்தையும் ஆறுமாத காலத்துக்கு ரத்துச் செய்யுமாறும் யாழ். மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ ஏகநாதன் உத்தரவிட்டார்.

1998 ஒகஸ்ட் 18 ஆம் திகதி உரும்பிராய்ப் பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் இராணுவ டிரக் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த உரும்பிராயைச் சேர்ந்த பவளகாந்தன் விஷ்ணுராஜா (வயது 19) என்ற இளைஞர் உயிரிழந்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன்முன்னிலையில்எடுக்கப்பட்டபோதுமேற்படிகுறிப்பிட்ட உத்தரவைப் பிறப்பித்த நீதிவான் அரச செலவாக 750 ரூபாவை நீதிமன்றுக்குச் செலுத்துமாறும் டிரக் சாரதியான எச். ஏ. அபயசிங் வுக்குப் பணித்தார்.

(இ-5)

உ

கைதடி இணுங்கித் தோட்டம்

## அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி ஆலயம்

## 1999 ஆம் வருட மகோற்சவ விஞ்ஞாபனம்

கைதடி இணுங்கித்தோட்டம் அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் 16-08-1999 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 11 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

விசேட உற்சவங்கள் வருமாறு:

16-08-99 – கொடியேற்றம் நண்பகல் 12.00 மணி
23-08-99 – வேட்டைத்திருவிழா பி. ப. 03.00 மணி
24-08-99 – சப்பறத்திருவிழா பி. ப. 03.30 மணி
25-08-99 – இரதோற்சவம் காலை 09.00 மணி
26-08-99 – தீர்த்த உற்சவம் காலை 10.00 மணி
27-08-99 – பூங்காவனம் பி. ப. 03.30 மணி

அடியார்கள் உற்சவ தினங்களில் கோயிலுக்கு வருகை தந்து அபிஷேகம், பூசைக்கு வேண்டிய பால், தயிர், இளநீர்,என்பன கொடுத்து முருகப்பெருமானது தெய்வீக அருளைப் பெற்றுய்யும்வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

– பரிபாலன சபையினர்,

கைதடி இணுங்கித் தோட்டம்,
அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி ஆலயம்.

முருகனின் அருள் வேண்டி விழா சிறப்புற வாழ்த்துவோர்:

வேணி களஞ்சியம்
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீவள்ளிக்குமரன் ஸ்ரீசங்கீதன் வெதுப்பகம்
இல. 421 (141), பருத்தித்துறை வீதி, நல்லூர்.

[68198]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Octapad Yamaha (Seven Drums) Model D. D. 50 விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: A. B. Asbury Church Lane, அராலி வடக்கு. (68189)

சகல தடுப்பு மருந்துகளும் கொடுக்கப்பட்ட ஒரு மாத சேவர்ஸ் இன பேட்டுக்குஞ்சு கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K. V. சாமி, 123, அம்பலவாணர் வீதி, அத்தி யடி, யாழ்ப்பாணம். (68205)

17—08—99 அன்று புறோ யிலர் குஞ்சுகள் யாழ். கால் நடை வளர்ப்போர் கூட்டு றவுச்சங்க அங்கத்தவர்களுக்கு மட்டும் விநியோகிக்கப்படும். 16—08—99 க்கு முன் பதிவு செய்யவும். பதிவு முறைப்படி வழங்கப்படும். K. V. சாமி, 123, அம்பலவாணர் வீதி. அத்தியடி, யாழ்ப்பாணம். (68206)

பந்தல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா. சிவ சுந்தரம், மூத்தவிநாயகர் கோவிலடி, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (68084)

## MATHS O/L 99

40 பாடவேளைகளில் ஆரம்பத்திலிருந்து இதுவரை யும் பெறுபேறு இல்லாதவர் களும் புதியவர்களும் 1000 தரமான வினாக்களுக்கு விடை அளிப்பதால் Credit, Dictinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். (ஆண்டு 6, 9, 10 உட்பட) B Sc ஆசிரியர்; 85, சிவன் கோயி லடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (68144)

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி தபால் அலு வலக வீதி, 2 ஆம் ஒழுங்கை யில் 3½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பொ. சதா, இல. 06, பஸ் நிலை யம், சாவகச்சேரி. [68211]

## ஆங்கிலக்கல்வி

ஆங்கிலம் ஆண்டு 5 முதல் ஆண்டு 11 வரை வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். பாடத்தில் குறைவானவருக்கு அடிப்படையிலிருந்து கற்பிக் கப்படும். தொடர்பு: வீள. இல. 928 மே/பா உதயன். (68163)

## ரூபவாஹினியில் கல்விச் சேவை

குடாநாட்டு மாணவர் களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத் துடன் வாரந் தோறும் வியா ழன், வெள்ளி ஆகிய இரு தினங்களில்ரூபவாஹினியாழ். சேவையில் விசேட கல்விச் சேவை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

இந்தஇரு தினங்களிலும் பகல் ஒரு மணிமுதல் இரண்டு மணி வரை முதலாவது அலை வரிசையில் இந்த நிகழ்ச்சிகள் இடம்பெறும் என்றும்— கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி போன்ற பாடங் கள் ஒளிபரப்பப்படும் என் றும்— பலாலி பாதுகாப்பு தலை மையகம் அறிவித்துள்ளது. (ஐ-3)

## இறைச்சிக்கோழி

மலிவு விலையில் இறைச்சிக் கோழி [புறோயிலர்] 1கிலோ தொடக்கம் சகல நிறைகளி லும் பெற்றுக்கொள்ளலாம். தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். 217/A,ஆஸ் பத்திரி வீதி, [முலவைச்சந்தி அருகில்] யாழ்ப்பாணம். [68184]

இறைச்சிக்கோழி (Broiler) கல்பேட்ஸ் என்பன விற்ப னைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப் படும். தொடர்பு:40,கோயில் வீதி, யாழ்ப்பாணம். (68196)

இறைச்சிக்கோழிகள் தின மும் சுத்தம் செய்து (பாதி உட்பட) பெற்றுக்கொள்ள லாம். குறைந்த விலை, நுட்ப மான நிறுவை. அத்துடன் அடை முட்டையும், வாழைக் குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை, [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு,] முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(68141)

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. தின மும் சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ள லாம். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப் பாணம், (சின்னக்கடை அருகில்). (68138)

இறைச்சிக்கோழி (புறோயி லர்) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற் றுக்கொள்ளலாம்.தொடர்பு: கண்ணா வீடியோ சென்ரர் வளவு, மான் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (68155)

புறோயிலர் கோழிகள் எம் மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: வே. பத்ம நாதன், நவாலி தெற்கு, மானிப்பாய். [68208]

இறைச்சிக்கோழி புறோயி லர் விற்பனைக்கு உண்டு. குறைந்த விலையில் மொத்த மாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சுத் தம் செய்தும் கொடுக்கப் படும். தொடர்பு: லக்கி மத வடி ஒழுங்கை, திருநெல் வேலி. (68110)

## பிரத்தியேக வகுப்பு

A/L கணக்கீடு, கிரயவியல் 8 ஆம், 9ஆம், 10ஆம் வகுப்பு களுக்கான கணிதம் என்பன தனிப்பட்ட முறையிலோ சிறுகுழுக்களாகவோ சிறந்த முறையில் கற்பித்து சிறந்த பெறுபேறுக்கு உத்தரவாதம் அளிக்கப்படும். தொடர்பு: இல. 841, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சஞ்சுவான் தேவாலயம் அருகில்]. [68166]

## புறோயிலர் குஞ்சுகள்

இரண்டு நாள்கள் வளர்ச்சி யடைந்த புறோயிலர் குஞ்சு கள் உடன் விற்பனைக்கு உண்டு. (16-8-99) திங்கள் பிறிமா Hi - line சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் விநியோ கிக்கப்படும். வை.சிவகுமார், நாவலர் வீதி, அத்தியடிச் சந்தி, யாழ்ப்பாணம். (68180)

## தவறிவிட்டது

க.கனகபூஷணி என்பவரது தேசிய அடையாள அட்டை [556171580 V], விசேட அடையாள அட்டை ச. சாந்தரூபி, ச. பிரகாஸ் என் பவர்களது விசேட அடை யாள அட்டைகள் என்பன ஒன்றாக யாழ். ஆஸ்பத்திரி யில் தவறிவிட்டன. கண் டெடுத்தவர்கள் E.S. பேரம் பலம் அன் கோ யாழ்ப் பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [68188]

வைரமுத்து தவபாக்கியம் என்பவரது விசேட அடை யாள அட்டை, தேசிய அடையாள அட்டை என்பன யாழ். நகருக்குள் 10-8-99 அன்று தவறிவிட்டன. கண் டெடுத்தவர்கள் திரு- நவரட் ணம் 36/14, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை என்னும் முகவரியில் ஒப்ப டைக்கவும். (68161)

## சந்தைப்படுத்தல்

B. A, B. Com.மாணவர்களுக் கான சந்தைப்படுத்தல் முகாமை எனும் நூல் வெளி வந்துவிட்டது. இ. இரட் ணம் சிரேஷ்ட விரிவுரையா ளர், பிரபல புத்தகசாலை களில் பெற்றுக் கொள்ள லாம். (68191)

## விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட
பிறந்த தின, திருமண வாழ்த்துமடல்கள்,
அழைப்பிதழ்கள்
விற்பனைக்கு உண்டு.

**லிங்கன் ஸ்ரோர்ஸ்**

168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/8510)

## அறிவித்தல்

எமது வலிகாமம் வடிசாலையில் உற்பத்தி செய்யப் படுகின்ற சாராய வகைகளின் சில்லறை விலைகள் 05-08-99ஆம் திகதி தொடக்கம் பின்வரும் விவரப்படி குறைக்கப்பட்டுள்ளதை 05-08-1999 ஆம் திகதிய ''உதயன்'' பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தி இருந் தோம்.

ஆனால் சில இடங்களில் பழைய விலையிலேயே விற்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே சில்லறை வியாபாரிகள் குறித்த விலைக்கு மேல் விற்பனை செய்யாது ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

விகர் (750 மி. லீற்றர்) — ரூபா 180/-
பனை விசேடம் (750 மி. லீற்றர்) — ரூபா 184/-

பொதுமுகாமையாளர்.

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய். (வ—து) (சி/8512)

## தேவை

**1. சமையல் ஆள்:**

திறமையும் நேர்மையுமுள்ள 45 வயதுக்குக் குறையாமலும் 60 வயதுக்கு மேற்படாமலும் உள்ள பெண்பாலார் விண்ணப்பிக்கவும். சம் பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**2. ஆண் பிள்ளைகள் மேற்பார்வையாளர்:**

50 வயதுக்கும் 65 வயதுக்கும் உட்பட்ட குறைந் தது 10 ஆம் வகுப்பு வரை படித்த ஆண்கள் தேவை. தனி நபர் அல்லது ஓய்வூதியம் பெறு பவர் விரும்பத்தக்கது. இருப்பிடம், உணவு வசதி உண்டு. சம்பளம் நேரில் பேசித் தீர்மா னிக்கப்படும். சுயவிபரக்கோவையுடன் விண் ணப்பிக்கவும்.

மேற்படி பதவிகளுக்கு
விண்ணப்ப முடிவு திகதி: 31 - 08 - 1999.

ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம்
தர்மகர்த்தா சபை,
வதிரி, கரவெட்டி.

(சி/8516)

## உ

வேலணை பெருங்குளம்

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் மஹோற்சவ விஞ்ஞாபனம் - 1999

| | | |
|---|---|---|
| கொடியேற்றம்: | 16 – 08 – 99 | திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு |
| தேர்த்திருவிழா: | 25 – 08 – 99 | புதன்கிழமை பகல் 10 மணிக்கு |
| தீர்த்தத்திருவிழா: | 26 – 08 – 99 | வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு |

ஏனைய உற்சவங்கள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி பகல் 12-30 மணிக்கும் மாலை உற்சவங்கள் மாலை 3-30மணிக்கு ஆரம்பமாகி மாலை6-30மணிக்கும் முடிவடையும்.

குறிப்பு:
அனைத்து திருவிழா நாள்களிலும் அன்னதானம் வழங்கப்படும்.
தேவஸ்தான அர்ச்சனைக் கடையில் நியாய விலையில் அர்ச்சனைப் பொருள்கள் வழங்கப் படும்.
ஆலயம் வரை பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட் டுள்ளது.

[68207] பரிபாலன சபையினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 24 – 05 – 1931
மறைவு 16 – 07 – 1999

அமரர்

**சின்னையா கருணைலிங்கம்**

(இளைப்பாறிய அரசாங்க அச்சகக் காசாளர்)

மாதம் ஒன்று போனாலும் எம்
நினைவில் என்றும் நிலைத்து நிற்கும்
அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மணியர் வளவு,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (68204)

## யாழ். நகரில் மலிவு விலையில்

மட்பாண்டப் பொருள்கள் ❋ சுவர் மாபிள் ❋ தரை மாபிள் ❋ தரை விரிப்புகள் ❋ குளியலறைக் கோப்பைகள்

என்பவற்றைப் பெற்றுக்கொள்ள

**நியூ விமாகி**

27/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(68201)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அர்த்தமற்ற போரை நிறுத்தக்கோரி

# கொழும்பில் நடந்த ஆர்ப்பாட்டங்கள்

கொழும்பு, ஒக. 15

வடக்கு – கிழக்கில் நீண்டு செல்லும் யுத்தத்தை உடன் நிறுத்தி அரசியல் தீர்வு யோசனைகளை உடன் நாடாளுமன்றில் சமர்ப்பிக்குமாறு கோரி கடந்த வியாழனன்று கொழும்பு லிப்ரன் சதுக்கத்தில் ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டப் பேரணிகளும் இடம்பெற்றன.

அமைச்சர்கள் மற்றும் எம். பிக்கள் உட்பட கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, தேச விமுக்தி மக்கள் முன்னணி, சுதுநெலும் அமைப்புக்கள் உட்பட்ட பல அரசியல் கட்சிகளைச்சேர்ந்தோர் இவ்ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

லிப்ரன் சதுக்கத்தில் இரு வேறு இடங்களில் இருவகைப்பட்ட அமைப்புகள் இவ்ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளன.

அரசியல் பிரமுகர்கள் மற்றும் கட்சியினர் ஒரு புறம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அதேவேளையில் மறு புறத்தில் காணாமல் போன படையினரின் பெற்றோர், பிள்ளைகள், உறவினர்கள், பௌத்தபிக்குகள் உட்பட்ட பதினைந்திற்கும் மேற்பட்ட அமைப்புக்களைச் சேர்ந்தோர் சுமார் இரண்டாயிரம் பேர் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர்.

கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் சுமார் இரண்டுமணி நேரத்திற்கு மேல் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்திற்கு முன்னர் 'எமது குரல்' எனப்பட்ட அமைப்பு ஊர்வலம் ஒன்றையும் நடத்தியுள்ளது.

கொழும்பு ஆனந்தக் குமாரசுவாமி வீதியில் உள்ள மகாவலி நிலையத்திற்கு எதிரில் ஆரம்பமான இவ் ஊர்வலம் லிப்ரன் சதுக்கம்வரை நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கான மகஜர்களும் கையளிக்கப்பட்டன.

''போதுமடா சாமி எமது குரல் என்ற பதாகையின்கீழ் பெருமளவு பௌத்த குருமார்கள் மற்றும் நீதி அரசியலமைப்பு பிரதியமைச்சர் டிலான் பெரேரோ ஆகியோர் ஊர்வலத்தின் முன்னால் நடந்து சென்றனர்.

இவர்களைத் தொடர்ந்து யுத்தத்தில் தமது பிள்ளைகள் கணவன்மாரை இழந்த பெற்றோர் மற்றும் உறவினர்கள் சென்றனர்.

வடக்கு— கிழக்கில் இருந்து கொழும்புவந்த பலரும் ஊர்வலத்தில் ஆக்ரோஷமாக கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர்.

அமைச்சர்களான இந்திக குணவர்த்தன, பட்டிவீரக்கோன், மங்கள சமரவீர மற்றும் எம். பிக்களான வாசுதேவ நாணயக்கார, கே. பி. டீ. சில்வா ஆகியோரும் அரசியல் கட்சி ஊர்வலத்திற்கு தலைமை வகித்துச் சென்றனர்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட லங்கா சமசமாஜக் கட்சி பொதுச் செயலாளரும் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சருமான பட்டிவீரக்கோன்; அதிகாரப்பகிர்வு யோசனைகள் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டுமென நாம் வலியுறுத்துவதற்குக் காரணம் அர்த்தமற்ற இந்த யுத்தத்தில் யாரும் வெல்லமுடியாது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசியல் ஆலோசனைகள் அவசியம். ஆனால் அது யுத்தத்தால் மட்டும் ஏற்படுத்தக் கூடியதல்ல என்றார்.

இது தொடர்பாக பட்டிவீரக்கோன் மேலும் தெரிவிக்கையில்; இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அரசின் யோசனைகளுக்கு ஐ தே. கட்சி ஆதரவளிக்க மறுக்கிறது என்று காரணம் கூறிக்கொண்டு நாடாளுமன்றத்தில் அவ்யோசனைகளைசமர்ப்பிப்பதில் தாமதம் காட்டப்படுவது எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இன்றைய அரசு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது, நிறைவேற்று அதிகாரமுறையை ஒழிப்பது என்ற வாக்குறுதிகளை முன்வைத்தே ஆட்சிக்கு வந்தது. அவற்றில் ஒன்றைக் கூட இன்றுவரை நிறைவேற்றவில்லை. மக்களுக்குகொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல்போலிக்காரணம்கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அடுத்த இரு வாரங்களுள் அரசு தீர்க்கமான ஒரு முடிவுக்கு வராதுபோனால் அடுத்த நடவடிக்கை எடுப்பது பற்றிச் சிந்திக்கவேண்டி ஏற்படலாம். அரசுடன் இணைந்திருப்பது குறித்து மீளாய்வு செய்யும் நிலை கூட ஏற்படலாம் என்றார்.

அமைச்சர் மங்களசமரவீர உட்படப் பலரும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான நமது கருத்துக்களை வெளியிட்டனர்.

(ஐ-ரி)

## சமாதான முயற்சி...

[ஆறாம் பக்கத் தொடர்]

நினைத்துக் கொண்டிருக்கின்றன.

தீர்வுத் திட்டம் தொடர்பாக வர்த்தக சம்மேளனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் வேளை இந்த இரண்டு பிரதான கட்சிகளையும் ஒரே மேடையில் சந்திக்க வைத்தும் கூட இணக்கப்பாடானஒரு நிலைக்குக் கொண்டுவர முடியவில்லை. இறுதியில் செப்ரெம்பர் 30 ஆம் திகதி இதற்கான முடிவினைக் கண்டு விடுவோம் எனவும் கூறுகின்றனர்.

இந்த நிலையில் தான் விடுதலைப் புலிகளுடன்பேசப் போவதாகவும் வர்த்தக சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த இரணடு கட்சிகளையுமே இதுவரை இணக்கப்பாடான ஒரு நிலைக்குக் கொண்டுவர முடியாத நிலையில் வர்த்தக சம்மேளனம் திண்டாடித் தவிக்கின்றது.

சமாதானத்தைத் தொலைத்துவிட்டு சமாதானத்திற்கான பாதையினையும் தவறவிட்டுவிட்டு தமிழ் மக்களை இதுவரை ஏமாற்றிய இந்த இரு கட்சிகளும் மீண்டும் தமிழ் மக்களை நாடி ஓடி வரப்போகின்றனர், அடி நாக்கில் விஷமும் நுனி நாக்கில் அமிர்தமுமாக மீண்டும் தேர்தல் வாக்குறுதிகளை வழங்கப்போகின்றனர்.

வடக்கும் — கிழக்கும் பற்றி எரியும் நிலையில் மீண்டும் ஒரு தேர்தலினை தமிழ் மக்கள் எதிர்நோக்கவுள்ளன.

வடக்கும் கிழக்கும் பற்றி எரியும் வேளை பற்றி எரியும் நெருப்பில் மீண்டும் மீண்டும் எண்ணெய் வார்க்கப்பட்டுள்ளனரா அல்லது கடந்த காலங்களில் தாம் படித்த பாடங்கள் தொடர்பான அனுபவ முதிர்ச்சியுடன் செயல்படப் போகின்றனரா?

தமிழர் சமுதாயத்தின் இந்த நடவடிக்கையினை அகில உலகமே ஆவலுடன் எதிர்பாத்துக் கொண்டிருக்கின்றது.

★

## சமய சந்நிதியில்

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய மஹோற்சவ விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

25 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.00 மணிக்கு தேர்த் திருவிழாவும் வியாழச்கிழமை காலை8.00மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

தினமும் காலை 8.30 மணிக்கும் மாலை 4.00 மணிக்கும் உற்சவம் ஆரம்பமாகும். [ஐ-ரி]

நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் திருச்சொரூப பவனி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி முதல் இடம் பெறவுள்ளது.

ஆலய பங்குத்தந்தை பீற்றர் துரைரத்தினம் அடிகளார் திருநாள் திருப்பலி பூசைகளை நடத்துவார்.

(ஐ-17-17-9)

★ ★ ★

யாழ். வண்ணை மணிக் கூட்டுவீதி அரசடி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொருதினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 8 மணிக்கு 108 சங்காபிஷேகமும் பிற்பகல் யானை வாகனத் திருவிழாவும் மறுதினம் இறுதிநாள் உற்சவங்கள் இடம்பெறும். [க-6]

★ ★ ★

கைதடி இணுங்கித் தோட்டம் கந்தசாமி ஆலய மஹோற்சவம்நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம். பெறும் (க)

★ ★ ★

நாவற்குழி ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் இந்த மஹோற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ஐ-ரி)

★ ★ ★

கரவெட்டி பரலோகமாதா ஆலயத் திருநாள் இன்று ஞாயிற்றுக்கிழமை திருப்பலி பூசையுடன் நடைபெறும்.

(இ-173)

## குருபூசை

யாழ்ப்பாணம், ஒக. 15

மயில்வாகனம்சுவாமிகளின் 14ஆவது குருபூசைத் தினம் நாளை திங்கட்கிழமை செல்லச்சந்நிதி சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லை ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பண்டிதர் கை. நமசிவாய குருக்களின் சிறப்பு சொற்பொழிவு மற்றும் திருக்குறள்போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கலும் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகள் சந்நிதி ஆச்சிரமத்தில் அண்மையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மரவேலைப் பயிற்சிப் பாடசாலை சுன்னாகத்தில் புனரமைப்பு

சுன்னாகம், ஒக. 15

சுன்னாகத்தில் அமைந்துள்ள மரவேலைப் பயிற்சிப் பாடசாலையும் தும்புத் தொழிற்பயிற்சி நிலையமும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நுண்கருத் திட்டத்தின் கீழ் 11 லட்ச ரூபா செலவில் இவை புனரமைக்கப்பட்டன. இவற்றுக்கான இயந்திரங்கள் கைத்தொழில் அமைச்சால் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் பயிற்சி வகுப்புக்களை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் —

இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்.

வலி. தெற்கு பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்தகால வன்செயல்களின் போது இப்பாடசாலை சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-27)

# 'லங்கா முடித்த' கப்பலில் யாழ். உற்பத்திப் பொருள்

## கொழும்புக்கு அனுப்பப்படும்

யாழ்ப்பாணம், ஒக. 15

காங்கேசன்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் 'லங்கா முடித்த' கப்பலில் யாழ். விவசாய உற்பத்திப் பொருள்களை கொழும்புக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பலில் விவசாயப் பொருள்களை கொழும்புக்கு அனுப்பவுள்ளவர்கள் யாழ். சிவில் நிர்வாக அதிகாரியுடன் தொடர்புகொண்டு பொருள்களை அனுப்புவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இந்தக் கப்பலில் அனுப்பப் படவுள்ள பொருள்கள் தொடர்பான பட்டியலை யாழ். சிவில் நிர்வாக அதிகாரியிடம் சமர்ப்பித்து அனுமதி பெற்றவர்களுக்கே கப்பலில் பொருள்கள் ஏற்றுவதற்கான அனுமதி வழங்கப்படும் என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-5-9-ரி)

## நல்லூர் லயன்ஸ் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஒக. 15

நல்லூர் லயன்ஸ் கழகம் நடத்தும் மருத்துவ முகாம் இன்று காலை 8 மணி முதல் பகல் ஒரு மணி வரை திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

டாக்டர் க. பிரதீப்குமார் தலைமையில் மருத்துவ பீட மாணவர்கள் இந்த மருத்துவ முகாமில் கலந்துகொண்டு கண் பரிசோதனை, சலரோகம், இரத்தஅழுத்தம், வாய்ப் புற்றுநோய் உட்படப் பல வியாதிகளுக்கு மருத்துவ ஆலோசனைகளை வழங்குவார்கள். (இ-5)

## ஆங்கிலப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஒக. 15

ஆங்கிலக் கல்லூரியால் நடத்தப்படவுள்ள தபால் மூல ஆங்கிலப் பயிற்சி நெறியின் அங்குரார்ப்பண வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் [ஆங்கிலம்] டி. ஆர் அருமைநாயகம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

[ஐ-க]

## விளையாட்டு விழா

மானிப்பாய், ஒக. 13

மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய மாதிரி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நிலையத் தலைவர் சீ. வீ. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார்.

(இ

## கந்தபுராண படன பூர்த்தி விழா

திருநெல்வேலி அருள்மிகு தலங்காவல் பிள்ளையார் ஆலயத்தில் தொடர்ந்து நடைபெற்று வந்த கந்தபுராணப் படனத்தின் பூர்த்தி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் ஓய்வுபெற்ற ஆசிரியர் செல்வி ச. தங்கப்பொன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் புராண படன நிகழ்வில் கலந்து கொண்ட பௌராணிகர்களான ம. ஆறுமுகம், வ. சிவராசசிங்கம் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர் (க-7)

## நல்லைக் 'குமரன்' மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக. 15

'நல்லைக் குமரன்' மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி புதன் காலை 8.30 மணியளவில் நாவலர் கலாசாரமண்டபத்தில் யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியசுவாமிகள் மாவை ஆதீனம் சிவ. சு. து. ஷண்முகநாதக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் சிறப்புரையாற்றுவார்.

பதிப்பாசிரியர் ந. விஜயசுந்தரம் மலர் வெளியீட்டு உரை நிகழ்த்துவார்.

முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கோ. சி. வேலாயுதம் ஆய்வுரை வழங்குவார். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் முதற்பிரதி பெறவுள்ளனர்.

யாழ். மாநகர சைவ சமய விவகார குழுவினரால் நல்லூர் உற்சவத்தை ஒட்டி வருடாந்தம் மலர் வெளியிடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது

## கொழும்பு பயண அனுமதி

யாழ்ப்பாணம், ஒக. 15

யாழ். குடாநாட்டில் இருந்து கப்பல் மற்றும் விமான மூலம் கொழும்பு பயணம் செய்வதற்கு இம்மாதம் 13 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோரின் எண்ணிக்கை விவரங்களைப் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக யாழ் சிவில் நிர்வாக அலுவலகம் வெளியிட்டுள்ளது.

அவை வருமாறு:—

சங்கானை–62பேர்.
நெடுந்தீவு– 09 பேர்.
யாழ்ப்பாணம்- 586 பேர்.
ஊர்காவற்றுறை– 74 பேர்.
கரவெட்டி –02 பேர்.
கோப்பாய் –153 பேர்.
நல்லூர் - 178 பேர்.
சண்டிலிப்பாய் –94 பேர்.
தெல்லிப்பழை –08 பேர்.
உடுவில் – 137 பேர்.
வேலணை - 67 பேர் [ஐ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வடக்கு..

(முதலாம் பக்கத் தொடர்)

னேழு சபைகளையும் உரிய முறையில் நடத்தமுடியாதுள்ளது.

இந்த நிலையில் வடக்கு—கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலையோ அன்றி உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களையோ நடத்தக் கூடிய சூழ்நிலை அங்கு இல்லை.

வட பகுதியில் தேர்தல் நடத்துவதற்கான உகந்த சூழ்நிலை இருப்பதாகக்கூறியே உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை அரசு கடந்த வருடம் நடத்தியது எனினும் யாழ். மாநகர சபையின் மேயராக பதவியேற்ற திருமதி சறோஜினி யோகேஸ்வரன் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். இவரைத் தொடர்ந்து மேயராக பதவியேற்ற பொன். சிவபாலனும் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைகளையடுத்து உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களாக பதவி ஏற்றவர்களில் 86 பேர் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் வடக்கு — கிழக்கு மாகாண சபைக்கோ அல்லது வடக்கு — கிழக்கிலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கோ தேர்தல்கள் நடத்தும் உத்தேசம் எதுவும் இல்லை.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## கிளைமோர்...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டனர்.

அதே சமயம் மட்டக்களப்பு நகரில், திருகோணமலை வீதியில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் தமது வீட்டு வேலிகளை அகற்ற வேண்டுமென்று பொலீஸாரால் கோரப்பட்டுள்ளது.

வீதி ஓரங்களில் குப்பைகளைக் குவிக்க வேண்டாம் என்றும் பொலீஸார் கோரியுள்ளனர். (இ-5-21)


புலமைப் பரிசில்
2000
வகுப்புகளுக்கு
மாணவர்களை
சேர்ப்பதற்கான
அனுமதிப் பரீட்சை
17-08 99 பி ப. 3 மணி
பிரிவு !
ஆரம்பம்: 19-08-99
BOND
யாழ் நகர்.
(68224)


# வர்த்தக சம்மேளனத் தூதுக்குழு

# புலிகளை சந்திக்க அனுமதி கேட்கிறது

கொழும்பு, ஒக. 15

கொழும்பிலுள்ள வர்த்தக சம்மேளனத் தூதுக் குழுவினர் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்காக லண்டனிலுள்ள விடுதலைப் புலிகளின் சர்வதேச செயலகத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

வர்த்தக சம்மேளனத்தூதுக் குழுவின் தலைமையில் பொ. ஐ. மு., ஐ. தே. க. ஆகிய கட்சிகளின் பிரமுகர்களுடன் நடைபெற்ற இரண்டாம் கட்டச் சந்திப்பில் சில அரசியல் விடயங்களில் பொது இணக்கப்பாடு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறியவேண்டுமென்பதில் வர்த்தகக் குழுவினர் ஆர்வம் கொண்டுள்ளனர்.

ஐ. தே. க., பொ. ஐ. மு. கட்சிகளுடன் பேச்சு நடத்தி வரும் வர்த்தக சம்மேளனக் குழுவினர் வன்னிக்கு நேரில் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதகுற் முடிவு செய்துள்ளதையடுத்தே இதற்கான அனுமதியை வழங்கக் கோரி லண்டனுக்கு இவர்கள் கடிதம் எழுதியுள்ளனர்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்குடன்கொழும்பிலுள்ள வர்த்தக சம்மேளனம் அதன் தலைவர் லலித் கொத்தலாவல தலைமையில் ஐ. தே. க., பொ. ஐ. மு. கட்சிகளை ஒரே மேசையில் கூட்டி பேச்சு நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது

(இ-5)

## இலக்கிய அரங்கு

யாழ்ப்பாணம், ஒக. 15

தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் நடத்தும் இலக்கிய அரங்கு இன்று மாலை 3. 30 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும். (இ-5)

## இருவர் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 15

அச்செழுவிலுள்ள 51ஆவது படைப் பிரிவில் ஆனைக்கோட்டை, கைதடிப் பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நவரட்ணம் மனோராஜ், கைதடி கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி ஜெயகரன் ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

இந்தப் படைப் பிரிவில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றனர் என்று படை அதிகாரிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாவட்ட அலுவலகத்துக்கு அறிவித்துள்ளனர். (இ-5-ரி)

## சிறுவர்...

[முதலாம் பக்கத் தொடர்]

இந்தப் பேரணி தர்மபுரம் வரை நடைபெற்றது.

பேரணி தர்மபுரம் பொது மைதானத்தைச் சென்றடைந்ததும் கிளிநொச்சி முருகானந்த வித்தியாலய ஆண்டு 5 இல் கல்வி பயிலும் மாணவன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தர்மபுரம் பங்குத் தந்தை உட்பட பலர் ஆசியுரைகள் வழங்கினர். (இ-5)

## இன்று

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்க பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1 மணிக்கு சங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சி. ஆனந்தராசா தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி கலந்துகொள்வார். [இ-5]

## புலிகளோ...

[முதலாம் பக்கத் தொடர்]

களிக்காது.

நாடாளுமன்றில் அரசின் தீர்வுப் பொதியை நிறைவேற்றுவதற்கு அரசுக்கு 113 வாக்குகளின் ஆதரவு தேவை எனினும் அவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் தற்போதைய அரசு இல்லை.

இப்படி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து ஐ. தே. கவுக்கும் அரசுக்கும் இடையில் இணக்கத்தை ஏற்படுத்த வர்த்தக சங்கங்களின் சம்மேளனங்கள் முயன்று வரும் வேளையில் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை—

வர்த்தக சங்கங்களின் சம்மேளனத் தலைவர் லலித் கொத்தலாவல தலைமையில் அரச — ஐ. தே. க. பிரதிநிதிகளுக்கிடையில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற சந்திப்பில் அரசின் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்ற ஐ. தே. க. ஆதரவு தரமாட்டாது என்று ஐ.தே.க. பிரதிநிதிகள் தெரிவித்திருந்தது தெரிந்ததே. (இ-6)

## புலிகளின்...

[முதலாம் பக்கத் தொடர்]

இரு தரப்பினரதும் உயர் மட்டத் தலைவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் யோசனைகளை மட்டும் புலிகளிடம் சமர்ப்பித்து அவை தொடர்பாகப் பேச்சு நடத்துவதே சிறந்தது.

எனினும் தீர்வுத் திட்டம் குறித்து பிரபாகரனுடன் தான் பேசவேண்டும் என்பதை ஒரு முன் நிபந்தனையாக நான் முன்வைக்கப் போவதில்லை.

பிரபாகரன் தீர்வுத் திட்டம் குறித்து நேரில் பேச மறுக்கும சந்தர்ப்பத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயம் மிக கடினமானதாகவே இருக்கும்.

இப்படி அவர் கூறினார். (இ-5-6)

## கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஒக. 15

பிற்பகல் 2.00 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டவர் மாலை வயல் வெளியிலுள்ள கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

மானிப்பாயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நமசிவாயம் சிவசெந்தில்நாதன் (வயது 42) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் மரண விசாரணையின் பொருட்டும், பிரேதபரிசோதனையின் நிமித்தமும் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இருவருடங்களுக்கு மேலாக இவர் மனநோயினால் பீடிக்கப்பட்டிருந்தார் என்றும், அதற்கான சிகிச்சையைப் பெற்றுவந்தார் எனவும் உறவினரால் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## அறநெறி விழா

நாவற்குழி அறிவொளி மன்ற அறநெறிப் பாடசாலையின் அறநெறி விழா இன்று பி. பகல் 2. 00 மணியளவில் நாவற்குழி பல. நோக்கு கூ. ச. மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

செ. குமாரசாமி தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

கலை நிகழ்ச்சிகள் மற்றும் விவாத அரங்கு, திருமுறை ஓதல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஐ-ரி)

## மெதடிஸ்த பிரதிநிதிகள் குழு யாழ்ப்பாணம் விஜயம்

யாழ்ப்பாணம், ஒக. 15

கொழும்பு மெதடிஸ்த மிஷன் தலைமையகத்திலிருந்து மூன்று பேர் அடங்கிய நல்லெண்ணக் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

வணக்கத்துக்குரிய அனுரா பெரேரா, வணக்கத்துக்குரிய ஜெரோம் சகபந்து மற்றும் அஜந்தா பெர்னாண்டோ ஆகியோரே யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

யாழ். மக்களின் உண்மையான வாழ்க்கை நிலைமையை நேரில் கண்டறியும் பொருட்டு யாழ். வந்திருக்கும் இவர்கள் குடாநாட்டின் பல இடங்களையும் சென்று பார்வையிட்டனர்.

நேற்று அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் இணைச் செயலாளர் எஸ். பரமநாதன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலும் இவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது யாழ். மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைகள், இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் கைதுகள், தனியார் கப்பல் சேவையால் பொருள்களின் விலை ஏற்றம், மாணவர்களின் கல்வி நிலை மற்றும் தமிழ் மக்களின் போராட்டத்துக்கான காரணங்கள் ஆகியவை தொடர்பாக விரிவாக உரையாடப்பட்டது.

மெதடிஸ்த பிரதிநிதிகள் மூவரும் நேற்று யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக்குரு வண. எஸ். எஸ். ரெரன்ஸ் அவர்களின் பிரியாவிடை வைபவத்திலும் கலந்து கொண்டனர்.

இன்று வண. அனுரா பெரேரா யாழ். சென் பீற்றர்ஸ் மெதடிஸ்த ஆலயத்திலும். வண்ணார்பண்ணை மெதடிஸ்த ஆலயத்திலும்—

வண. ஜெரோம் சகபந்து பருத்தித்துறை மெதடிஸ்த ஆலயத்திலும்—

அஜந்தா பெர்னாண்டோ புத்தூர், அச்செழு மெதடிஸ்த ஆலயங்களிலும் அருளுரை நிகழ்த்த உள்ளனர்.

இவர்கள் புதனன்று கொழும்பு திரும்புகின்றனர். (இ-ரி-9)

## அமைச்சர்...

[முதலாம் பக்கத் தொடர்]

பெறும் என்று தோன்றுகின்றது.

நான் மூன்று தடைவைகள் பா. ம. க சார்பாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தேன். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ. தி. மு. கவின் உதவியால் தான் வெற்றி பெற்றேன். அ. தி. மு. க ஆதரவினால் தான் எனக்கு அமைச்சர் பதவி கிடைத்தது.

இப்படி அவர் கூறினார்.

அ.தி.மு. கவில் இணைந்து கொண்டாலும் இந்தத் தடவை தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அதேசமயம் தலித் எழில் மலையின் இந்த முடிவு அதிர்ச்சியையும் வருத்தத்தையும் தருகின்றது. அவரது இந்த முடிவு எதிர்பாராத ஒன்று என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

அமைச்சர் தலித் எழில் மலையின் இராஜினாமாவை இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் ஏற்றுக் கொண்டுள்ளதாகப் பிந்திய செய்திகள் தெரிவித்தன.

கடந்த மக்களவைத் தேர்தலில் பா. ம. க, சார்பில் சிதம்பரம் (தனி) தொகுதியில் போட்டியிட்டு தலித் எழில்மலை 7 ஆயிரத்து 955 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

பாட்டாளி மக்கள் கட்சியால் தற்பொழுது வெளியிடப்பட்ட முதலாவது வேட்பாளர் பட்டியலில் தலித் எழில்மலையின் பெயர் இடம் பெற்றிருக்கவில்லை. இ-6)

## ஹற்றனில்...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று குண்டு மீட்கப்பட்டதை அடுத்து ஹற்றன் பகுதியை சுற்றிவளைத்த படையினர் தீவிர தேடுதல்களை நடத்தினர்.

மலையகப் பகுதியில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்கள் இடம்பெற்றுள்ளன என்றும்—

இதனை அடுத்து மலையகப் பகுதியில் விசேட பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

மலையகப் பகுதியில் பொலீஸ் பதிவு இல்லாதவர்களை உடனடியாக பதிவினை மேற்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (இ-6)


எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி
உங்கள் கலர் படச்சுருள்களை உரிய
தரம் வாய்ந்ததாகவும் தரம் குன்றாததாகவும்
மூன்று நான்கு தினங்களில்
பிரதியாக்கம்
செய்து தரும் ஒரே ஸ்தாபனம்
சுப்பஸோ கலர் லாப்
உங்களுக்குத் தேவையான
படங்களைப் பிடித்திடவும்
உடனுக்குடன் பெற்றிடவும்
நாடவேண்டிய ஒரே இடம்
சுப்பஸோ
198/5, நாவலர் வீதி, 100A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். [சி/8524)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-08-99 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org